வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 03 10.01.2022 திங்கட்கிழமை இதழ் : 36 பக்கங்கள் : 16




# வர்த்தக கடன் தாருங்கள் – ஜனாதிபதி வரும்நாளில் நிறைவேறும் – வாங் யீ

## நேற்றைய சந்திப்பில் இணக்கம்

கொழும்பு, ஜனவரி 10

சீனாவிலிருந்து மேற்கொள்ளப்படும் இறக்குமதிகளின்போது சலுகை வர்த்தகக் கடன் தருமாறு அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சர் வாங் யீயிடம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கேட்டார்.

இதற்கு பதிலளித்த சீன வெளியுறவு அமைச்சர் வாங் யீ, “எதிர்வரும் காலங்களில் அது நிறைவேறும்”, என்று நம்பிக்கையளித்துள்ளார். 15

## இன்று முதல் நாளாந்தம் மின்வெட்டுக்கு அனுமதி

கொழும்பு, ஜன. 10

இன்று முதல் நாளாந்தம் மின்வெட்டை அமுல்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க இதனைக் குறிப்பிட்டார். 15

## கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும்போகம் பெருவீழ்ச்சி!

கிளிநொச்சி, ஜன. 10

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது பெரும்போக அறுவடை ஆரம்பமாகியுள்ளது. இந்நிலையில், ஓர் ஏக்கருக்கு 12 தொடக்கம் 15 வரையான மூட்டை நெல்லே கிடைக்கின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த முறை 15

## வாள்வெட்டு குழு சந்தேகநபர் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 10

கோப்பாய் மற்றும் கொக்குவில் பகுதிகளில் இரு வீடுகளுக்குள் புகுந்து வாள்வெட்டு வன்முறையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மானிப்பாயைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் புல 15

## கிணற்றில் வீழ்ந்து சிறுவன் உயிரிழப்பு

ஊர்காவற்றுறை, ஜன. 10

கிணற்றடியில் விளையாடிய 4 வயது சிறுவன் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து உயிரிழந்தார்.

நேற்று காலை ஊர்காவற்றுறை - நாரந்தனை வடக்கு பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இதில், விஜயேந்திரன் ஆரணன் என்ற 4 வயது 15



## நயினை அம்மனை வழிபட்டார் சஜித்!

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தில் வழிபாடு செய்தார்.

நேற்று காலை நயினாதீவுக்கு சென்ற சஜித் பிரேமதாஸ நாக விகாரைக்குச் சென்று வழிபாடுகளை மேற்கொண்டு 15



## காங்கேசன்துறை - கல்கிசை புதிய ரயில் சேவை ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜன. 10

காங்கேசன்துறை - கல்கிசை இடையே குளிரூட்டப்பட்ட நகர் சேர் கடுகதி புதிய தொடருந்து சேவை நேற்று அறிமுகப்படுத்தப்பட்டது.

நேற்று அதிகாலை 5.10 மணியளவில் கல்கிசையிலிருந்து சேவையை ஆரம்பித்த தொட 15

## பேரினவாதத்தை ஊக்குவிப்பதிலேயே ராஜபக்ஷ அரசு கவனமாகவுள்ளது

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் விசனம்

புதுடில்லி, ஜன. 10

இலங்கையில் பல்வேறு அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கும் நிலையில் அவற்றை சீர்செய்து நாட்டின் நிர்வாகத்தை 15

## பரீட்சைகள் எவையும் ஒத்திவைக்கப்படாது!

### கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஜன. 10

கல்விப் பொதுதராதர உயர்தரம் மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் மற்றும் கல்வி பொதுதராதர சாதாரண தரப் பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட மாட்டாது என கல்வி அமைச்சின் செயலாளர் பேரா 15

## வடக்கு, கிழக்கு மீனவர்களுக்கு வானிலை நிலையம் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 14

நாட்டின் தென்கிழக்கு பகுதியில் எதிர்வரும் சில நாட்களுக்கு குறைந்த வளிமண்டல குழப்ப நிலை உருவாகும் சாத்தியம் காணப்படுவதால், மீனவர்கள் மற்றும் கடற்படையினரை அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கப்பட்டுள்ளது. 15

### மட்டு. மாநகர சபை விவகாரம்

## பிள்ளையான் - முதல்வர் மூடிய அறைக்குள் பேச்சு

மட்டக்களப்பு, ஜன. 09

மட்டக்களப்பு மாநகர சபையில் முதல்வருக்கும் ஆணையாளருக்கும் இடையே ஏற்பட்டுள்ள அதிகாரப் போட்டி தொடர்பில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் சி. சந்திர 15

## கொரோனாவால் மேலும் 7 பேர் பலி

கொழும்பு, ஜன. 10

இலங்கையில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 15 ஆயிரத்து 119 ஆக உயர்வடைந்துள்ளது.

இலங்கையில் நேற்று முன்தினம் கோவிட் தொற்றால் மேலும் 7 பேர் உயிரிழந்தனர். 15

## சீனா எமது உயிர் தோழன்

### பிரதமர் மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 10

“சீனா எமது உயிர் தோழன். வரலாற்றில் எவ்விடத்திலும் எம் மத்தியில் மனக்கசப்புகள் நேர்ந்ததில்லை”, என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கைக்கும் 15



## சீன வெளிவிவகார அமைச்சர் பிரதமர் மஹிந்தவுடன் பேச்சு

கொழும்பு, ஜன. 10

சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யீ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நேற்றுக் காலை கொழும்பில் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பில் இருதரப்பு விவகாரங்கள் குறித்து விவாதிக்கப்பட்டதென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து ருவிட்டரில் பதிவிட்டுள்ள அவர், சீனாவில் மருத்துவம் கற்கும் பெரு மள 15

## இப்படியும் நடக்கிறது…!

இந்தப் பத்தியில் சில தினங்களுக்கு முன்னர் கொழும்பு அரசியல் நண்பர் ஒருவர் சொன்ன தகவலை குறிப்பிட்டிருந்தேன்.

ஐக்கிய மக்ககள் சக்தியிலிருந்து பத்து பேருடன் வந்து அரசுடன் இணைந்து கொள்ளுமாறு ரணிலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது பற்றிய அந்தச் செய்தியின் மேலதிக தகவல்கள் சில இப்போது கிடைத்திருக்கின்றன.

ஆரம்பத்தில் அதனை ரணில் நிராகரித்து விட்டதாகவும் ஆனாலும் அவருடன் எஞ்சியிருக்கும் தலைவர்கள் சிலர் அவரை நெருக்குகின்றனர் எனவும் அந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

நீண்ட வற்புறுத்தலின் பின்னர் ரணிலர் சற்று இறங்கிவந்திருக்கிறார் என்றும், தனது தரப்பிலிருந்து அரசதரப்பிற்கு சில நிபந்தனைகளை ரணில் விடுத்திருக்கிறார் எனவும் அவருக்கு நெருக்கமான வட்டாரங்களிலிருந்து இப்போது தெரியவருகின்றது.

கடந்த தேர்தலில் ரணிலுக்கு மிக நெருக்கமானவர்கள் எல்லோருமே தோல்வியடைந்தனர். அவர்களில் சாகல ரத்நாயக்கா, அகிலவிராஜ் காரியவசம், கட்சி செயலாளர் பாலித பண்டார, தவிசாளர் வஜிர அபேவர்த்தன, மற்றும் ஒருவராக ஐவரை எம். பியாக்க வேண்டும் என்றும் அதற்காக பொதுஜன முன்னணியின் தேசியப்பட்டியல் எம.பி.க்கள் ஐவர் பதவிவிலகி இவர்கள் நியமிக்கப்படவேண்டும் என்பது அவரின் முக்கிய கோரிக்கையாம்.

அது மாத்திரமன்றி, சர்வதேச நாயண நிதியத்துடன் எத்தகைய உடன்பாட்டுக்கு செல்வதன் மூலம் பொருளாதார நெருக்கடியை தீர்க்கலாம் என்பது குறித்தும் அவர் தனது யோசனையில் தெரிவித்துள்ளாராம்.

இவை தவிர, அவர் தெரிவித்திருக்கும் மற்றும் இரண்டு யோசனைகள்தான் நமக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்தவை.

இலங்கையில் புரையோடிப்போயுள்ள தேசிய இனப்பிரச்னைக்கு தீர்வு காணும் வகையில் யோசனை ஒன்றையும், முஸ்லிம் மக்கள் தற்போது எதிர்கொள்ளும் பிரச்னைகளுக்கான தீர்வு யோசனை ஒன்றையும் ரணில் அரசுக்கு சமர்ப்பித்திருக்கிறாராம்.

அவரின் முதலாவது நிபந்தனையைக்கூட அரச தரப்பில் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், மற்றைய கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்பது தெரிந்ததுதானே.

இதேவேளை தெற்கில் மற்றுமொரு நகர்வும் அமைதியாக நடந்துகொண்டிருக்கின்றது. மைத்திரி ஜனாதிபதியாக இருந்தபோது ஆளுநர்களாக பதவி வகித்த மைத்திரி குணரத்ன, கீர்த்தி தென்னக்கோன், மற்றும் மைத்திரியின் ஆலோசகராக இருந்த சிரால் லக்திலக உட்பட்ட ஐவர் கொண்ட குழுவினர் அனைத்து எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனராம்.

இரண்டாயிரத்து பதினைந்தில் ஆட்சி மாற்றப் புரட்சியைச் செய்த முக்கியஸ்தர்களான இவர்கள் அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள். இப்போது எதிர்க்கட்சிகள் ஆள்ஆளுக்கு பிரிந்திருந்து அரசியல் செய்வதால் அரச தரப்புக்குத்தான் சாதகம் என்பதையும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை குறிவைத்து எதிரணியில் பலர் தனித்தனியாக ஓடிக்கொணடிருப்பது பயனற்றது என்றும் அவர்கள் ஒவ்வொரு தரப்பினராக சந்தித்து கலந்துரையாடி வருகின்றனர். அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியினரைச் சந்தித்த அந்தக் குழு, பின்னர் சஜித் தரப்பையும் சந்திக்கவிருக்கின்றது. அவர்களைச் சந்தித்த பின்னர் கரு ஜெயசூரியவையும் சந்திக்கவிருக்கின்றனர். கடைசியாக அவர்கள் ஜே.வி. பியினரையும் சந்திக்கவிருக்கின்றனர் என்று அவர்களுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

**- ஊர்க்குருவி**

# கோதுமை மா தடைப்படுமானால் பாண் மட்டுமே உற்பத்தியாகும்!

### யாழ். மாவட்ட கூட்டுறவு வெதுப்பகம்

**யாழ்ப்பாணம், ஜன. 10**

**எதிர்வரும் காலத்தில் இதர சிற்றுண்டிகள் உற்பத்தி செய்வதில் பெரும் எதிர் நிலை காணப்படுகின்றது. எனவே, எதிர் காலத்தில் பாணைத் தவிர ஏனைய உற் பத்திகளை நிறுத்த வேண்டி ஏற்படும் என்று வெதுப்பக உரிமையாளர்கள் கூறுகின்றனர் என யாழ். மாவட்ட கூட்டுறவு வெதுப்பக உரிமையாளர் சங்க ஊடகப் பேச்சாளர் கந்தசாமி குணரட்ணம் தெரிவித்தார்.**

தற்போது வெதுப்பக உற்பத்தியில் கோதுமை மாவு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விநியோகிக்கப்படுகிறது. இதனால், உற்பத்தி பொருள்கள் குறைவடைந்துள்ளன என்று வெதுப்பக உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

உற்பத்திக்கான கேள்வி அதிகரித்துள்ள நிலையில், கோதுமை மாவுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் தாம் பல்வேறு இடர்களை எதிர்கொள்கின்றனர் என்றும் வெதுப்பக உரி மையாளர்கள் கவலை வெளியிட்டனர்.

எனவே, எதிர்வரும் காலத்தில்தான், இதர சிற்றுண்டிகள் உற்பத்தி செய்வதில் பெரும் எதிர் நிலை காணப்படும். இலங்கை பூராகவும் 7, 250 வெதுப்பகங்கள் உள்ளன. இவற்றில் 3,000 வெதுப்பகங்கள் மட்டுமே தற்போது இயங்குகின்றன. இவற்றில் 1,500 பெரிய வெதுப்பகங்கள் மட்டுமே இயங்கிக் கொண்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் பிரபலமான வெதுப்பகங்களுக்கு கோதுமை மா இல்லை. அவர்கள் தனியாரை நாடிய காரணத்தால் அவர்களுக்கு சங்கம் மூலம் கோதுமை மா விநியோகம் இடம்பெறுவதில்லை. வெதுப்பக உரிமையாளர்களின் தேவையை பிறிமா கம்பனியால் தற்போது பூர்த்தி செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது. 60 வீதமான கோதுமை மாவே தற்போது விநியோகிக்கப்படுகிறது.

இதனால், யாழ். மாவட்டத்தில் அதிகமான பாடசாலைகளுக்கு தற்போது சிற்றுண்டிகளை வழங்க முடியாத நிலை காணப்படுகின்றது. உற்பத்தி குறைவு கேள்வி அதிகரித்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் இரண்டு சங்கங்களுக்கு, பிறிமா நிறுவனம் கோதுமை மாவை விநியோகம் செய்கின்றன. கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கம், மாவை எடுத்து குறைந்த விலையில் அங்கத்தவர்களுக்கு வழங்குகின்றது. ரூ. 5,600 விற்பனை செய்யும் கோதுமை மா வெளியில் தற்போது 8,000 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றது.

“முழுமையாக இந்த கோதுமை மாவு விநியோகம் சங்கத்துக்குள் உள்வாங்கப்படவில்லை. சாதாரணமாக சாதாரணமாக 600 மூடை கோதுமை மா விநியோகிக்கப்படும் நிலையில் அவற்றில் தற்போது மட்டுப்பாடுகள் நிலவுகின்றன. சாதாரணமாக, சங்கத்துக்கு 3,000 மூடை மா விநியோகிக்கப்படும் நிலையில் தற்போது 300 மூட்டை குறைக்கப்படுகின்றது. இதனால் மாவை வெளியில் கொள்வனவு செய்யக்கூடிய நிலை இருந்தாலும் தட்டுப்பாடு காணப்படுகின்றது.

இது வெதுப்பக உரிமையாளர் சங்கம் ஊடாக கிடைக்கப்பெற்றால், அதன் பயனாளிகளுக்கும் கிடைக்கப்பெற்ற வெற்றி. சில அங்கத்தவர்கள் வழங்கப்படும் கோதுமை மாவை சேமித்து வைத்து தட்டுப்பாடான காலத்தில் நிவர்த்தி செய்துகொண்டு வருகின்றனர். எதிர்வரும் காலத்தில் கோதுமை மாவுக்கான தட்டுப்பாடு தொடர்ச்சியாக நிலவும் பட்சத்தில், பாண் உற்பத்தியை தவிர இதர சிற்றுண்டிகளை உற்பத்தி செய்யமுடியாத நிலை காணப்படும். இது தொடர்பில் அரசாங்கம் உரிய கவனம் எடுத்து கோதுமை உற்பத்தியை வழங்க முன்வர வேண்டும்” என்றார். (ஐ)

## அமைச்சரவை மாற்றத்தை ஒத்திவைத்தார் ஜனாதிபதி?

கொழும்பு, ஜன. 10

அமைச்சரவை மறுசீரமைப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளதென அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

முக்கியமான சில விடயங்களைக் கருத்திற்கொண்டே அமைச்சரவை மாற்றம் பிற்போடப்பட்டுள்ளதெனவும் அந்த வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

அமைச்சரவை மாற்றம் ஜனவரி முற்பகுதியில் நிகழும் எனவும், முக்கியமான சில அமைச்சுகள் மாறவுள்ளன எனவும் முன்னதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

ஆனால், ஜனவரி மாதத்துக்குள் அமைச்சரவை மாற்றம் சாத்தியமில்லை என புதிய தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

## அரிசி விலை உயர்ந்தது!

கொழும்பு, ஜன. 10

நாட்டின் பல நகரங்களில் அரிசி விலையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

ஒரு கிலோகிராம் வெள்ளை பச்சை அரிசி 150 ரூபாய்க்கும் 160 ரூபாய்க்கும் இடையிலும் சிவப்பு பச்சை அரிசி 160 ரூபாய் முதல் 170க்கு இடையிலும் நாட்டரிசி ஒரு கிலோ கிராம் 170 ரூபாய் முதல் 180 ரூபாய்க்கு இடையிலும் விற்கப்படுகின்றது என்று அறிய வருகின்றது. .

அரிசி மட்டுமன்றி ஏனைய உணவுப் பொருட்களின் விலைகளும் இவ்வாறு அதிகரித்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# நாட்டில் அனைத்து பாடசாலைகளும் இன்று முதல் வழமை போன்று திறப்பு

கொழும்பு, ஜன. 10

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பாடசாலைகளும் இன்று திங்கடகிழமை முதல் வழமை போன்று திறக்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், பாடசாலை சிற்றுண்டிச்சாலைகளைத் திறக்க அனுமதிக்கப்படாது என்றும் சுகாதார வழிகாட்டுதல்களைப் பெற்ற பின்னர், அவற்றை திறக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, மாணவர்கள் தங்கள் உணவை வீட்டிலிருந்தோ அல்லது வெளியிலிருந்தோ கொண்டு வர வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அச்சமின்றி தமது பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்புமாறு கொழும்பு வலயக் கல்விப் பணிப்பாளர் ஜி.என்.சில்வா பெற்றோர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கல்வித்துறைக்கு 100 வீத தடுப்பூசி செலுத்தும் பணியை கல்வி அமைச்சகம் முடித்துள்ளது, எனவே அச்சப்பட தேவையில்லை என்றும் 12 முதல் 15 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு தடுப்பூசி போடும் பணி நடந்து வருகிறது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

Eelanadu 10.01.2021 திங்கட்கிழமை
பிலவ வருடம், மார்கழி 26

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## தீர்வை அடையும் வழி?

2009இற்கு பின்னரான தமிழ் தேசிய அரசியல் சூழலிலில், பாரபட்சமில்லாமல் அனைத்துத் தமிழ்த் தேசிய கட்சிகளும் அரசியல் தீர்வு தொடர்பில் பேசி வருகின்றன. தாங்களே கொள்கையில் உறுதியானவர்கள் என்பதை காண்பிப்பதில் முட்டிமோதிக் கொள்கின்றன. தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு தொடர்பில் பேசிவருகின்றது. கூட்டமைப்பின் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்துவரும் தரப்பினரோ - எந்தவோர் அரசியல் தீர்வும், தமிழர்கள் ஒரு தேசம் என்பதை அங்கீகரிப்பதாக இருக்க வேண்டுமென்கின்றனர். கடந்த இரு மாதங்களாக 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் சிலர் பதற்றமடைவதை காணமுடிகின்றது. இவ்வாறு எதிர்ப்பவர்களும் விமர்சிப்பவர்களும் மறுபுறம் மாகாண சபை தேர்தல் எப்போது வருமென்று காத்திருக்கின்றனர்.

இது அடிப்படையிலேயே நேர்மையற்ற செயலாகும். மாகாண சபை தேர்தலில் போட்டியிடும் கட்சிகளுக்கு ஏன் மக்கள் வாக்களிக்கின்றனர்? மாகாண சபையை பயன்படுத்தி ஏதாவது நல்ல காரியம் நடக்குமென்னும் நம்பிக்கையின் அடிப்படையிலேயே மக்கள் வாக்களிக்கின்றனர். ஆனால், மாகாண சபையில் கதிரைகளுக்காக அடிபட்டுக் கொண்டு, அதன் மூலம் கிடைக்கும் தனிப்பட்ட வரப்பிரசாதங்களை அனுபவித்துக் கொண்டு, அதனால் பயனில்லை என்று கூறுவது எந்த வகையில் நேர்மையான அரசியல்?

இப்போது அரசியல் தீர்வு விடயத்திற்கு வருவோம். 1949இல், இலங்கை தமிழ் அரசு கட்சி உருவாக்கப்பட்டது. தமிழ் மக்கள் மத்தியில் தமிழ் அரசு கட்சியென்று அறியப்பட்ட இக் கட்சி, சிங்களவர்கள் மத்தியில், சமஷ்டி கட்சியென்றே அறிமுகம் செய்யப்பட்டது. இந்த அடிப்படையில் நோக்கினால், தமிழ் மக்களின் சமஷ்டி கோரிக்கைக்கு சுமார் 73வருட கால வரலாறுண்டு. ஆனால், இன்றும் நாம் சமஷ்டி பற்றி பேசிக் கொண்டுதானே இருக்கின்றோம்? ஏன்? ஏனென்றால் எங்களால் அதைக் கடந்த 73 வருடங்களில் அடைய முடியவில்லை. இனி எப்படி அடையப் போகின்றோம்?

1976இல் வட்டுக்கோட்டை தீர்மானத்தை நிறைவேற்றிய தமிழ் மிதவாத தலைவர்களிடம், தனிநாட்டை எப்படி அடைவது என்னும் கேள்விக்கு பதிலிருக்கவில்லை. இந்த நிலையில்தான், விடுதலை இயக்கங்கள் தமிழர் அரசியலை கையிலெடுத்தன. அதுவே, பின்னர் விடுதலைப் புலிகள் தலைமையில் ஒரு பெரும் இயக்கமாக வளர்சியுற்றது. விடுதலைப் புலிகளின் அழிவுடன், இயக்க அரசியலின் கதையும் முடிவுக்கு வந்தது. இப்போது என்ன செய்வது?

இந்த கேள்வியுடன்தான், போரில்லாத, கடந்த பன்னிரெண்டு வருடங்கள் நம்மை சதாரணமாக கடந்து சென்றிருக்கின்றன. இந்த பன்னிரெண்டு வருடங்களில் பல்வேறு விடயங்கள் தொடர்பில் விவாதிக்கப்பட்ட போதும், எதுவும் வெற்றியளிக்கவில்லை. ஒவ்வொரு தேர்தல் மேடைகளிலும் சர்வதேச அழுத்தங்கள் தொடர்பில் கவர்ச்சிகரமான சுலோகங்கள் உச்சரிக்கப்பட்டன. ஆனால், அனைத்தும் புஸ்வாணமாகியதே இதுவரையான கதை.

1976இல் வட்டுக் கோட்டைத் தீர்மானத்தை நிறைவேற்றியபோது, எவ்வாறு - அன்றைய மிதவாதிகள், தனி நாட்டை அடையும் வழி தெரியாது விழிபிதுங்கி நின்றனரோ - அப்படித்தான் இப்போதும். சமஷ்டி, ஒரு நாடு இரு தேசம், கூட்டு சமஷ்டி - இப்படியான சொற்களுடன் கொள்கை தொடர்பில் மேடைகளில் பேசுவோர் இருக்கின்றனர்.

எனவே, ஒன்றை எதிர்க்கும் போது, அதனை விடவும் சிறந்த ஒன்றை அடைவதற்கான மாற்று வழிகளை மக்கள் முன்னால், வைக்க வேண்டும். அது முடியாவிட்டால், இன்றைய சூழலில் எது சாத்தியமோ அதன் மூலம் முன்நோக்கி பயணிப்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும். அரசியல் என்பது சாத்தியங்களை கையாளும் கலை என்பார்கள்.

# லசந்த விக்கிரமதுங்கவுடனான கிளிநொச்சி பயணம்!

அனந்த பாலகிடணர்

இலங்கையில் துணிச்சலாக கருத்துகளை முன்வைத்த பத்திரிகையாளர்களில் பலர் படுகொலை செய்யப்பட்டதே வரலாறாகியுள்ளது.

குறிப்பாக பாதுகாப்புத்துறை, அரசியல் துறை சம்பந்தமாக அரிய பல தகவல்களை தமது புலனாய்வு அணுகுமுறைகள் மூலம் வாசகர்களுக்கு தந்த பத்திரிகையாளர்கள் பலர் மிலேச்சத்தனமான முறையில் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். இவர்களில் ரிச்சர்ட் டி சொய்ஸா, 'தராக்கி' சிவராம், லசந்த விக்கிரமதுங்க ஆகியோர் கொழும்பில் கொலையுண்டவர்களாவர்.

இலங்கையின் இரண்டாவது நிறைவேற்று அதிகாரம்மிக்க ஜனாதிபதி காலஞ்சென்ற ரணசிங்க பிரேமதாஸவின் ஆட்சிக்காலத்தில் ரிச்சார்ட் டி சொய்ஸா கொல்லப்பட்டிருந்தார். இதன்பின்னர் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க ஆட்சியில் 2005ஆம் ஆண்டு தராக்கி சிவராம் கொல்லப்பட்டு கோட்டை ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பாராளுமன்றமருகே புதர் ஒன்றிலிருந்து அவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொல்லப்பட்டிருந்தார்.

2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி லசந்த விக்கிரமதுங்க அவரின் அலுவலகத்துக்கு காரில் செல்லும்போது பட்டப்பகல் வேளை அவரின் காருக்குள் வைத்தே கொலையாளிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

லசந்த கொல்லப்பட்ட தருணத்திலேயே வடக்கு - கிழக்கின் இறுதிக்கட்ட யுத்தமும் சூடேறியிருந்தது. அச்சமயம் இன்றைய ஜனாதிபதியாக இருக்கின்ற கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச்செயலாளராக இருந்தார். அத்துடன், இன்றைய பிரதமராக இருக்கின்ற மஹிந்த ராஜபக்ஷ அன்று ஜனாதிபதியாக இருநதார்.

கூடவே, தற்போது பாராளுமன்ற உறுப்பினராக இருக்கின்ற பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா அன்று இராணுவத் தளபதியாக இருந்தார். அக்காலப்பகுதியிலேயே மஹிந்த ராஜபக்ஷ அரசு இறுதிக்கட்ட யுத்தத்துக்காக ஏராளமான யுத்த தளபாடங்களை வாங்கி குவித்த வண்ணமிருந்தது.

அப்போது யுத்த தளபாட கொள்வனவில் இடம்பெற்ற சில மோசடிகளை வெளிப்படுத்திய நிலையிலேயே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொல்லப்பட்டிருந்தார். யுத்த காலத்தில் இராணுவத்தினருக்கு மாமிசம் விற்றவர்கள் கோடீஸ்வரர்களாகியிருந்தனர். இதுதவிர, துப்பாக்கிரவைகள் , சீருடைகள், பூட்ஸ் சப்பாத்துகள் என்பவற்றின் கொள்வனவுக்கு ஒப்பந்தகார்களாக இருந்தவர்கள் கூட பணக்காரர்களாகியிருந்தனர்.

எனவே, ஆயுதப் படையினருக்கு தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்ட விடயங்களில் காணப்பட்ட முறைகேடுகளை துணிச்சலோடு வெளிச்சத்துக்கு கொண்டு வந்ததையடுத்தே லசந்த விக்கிரமதுங்க பட்டப்பகல் வேளை கொலை செய்யப்பட்டார்.

லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டதன் 13ஆவது ஆண்டு கடந்த 8ஆம் திகதி நிறைவடைந்திருந்தது. இத்தருணத்தில் லசந்த விக்கிரமதுங்கவுடன் தமிழீழ விடுதலைப் புலிகளைச்சந்திக்க கொழும்பிலுள்ள சிரேஷ்ட பத்திரிகையாளர்களோடு கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையகத்துக்கு சென்றமை ஞாபகத்துக்கு வருகின்றது.

இரண்டாயிரமாவது ஆண்டுகளின் நடுப் பகுதியில் இச்சந்திப்பு நோர்வே தூதரகத்தின் அனுசரணையோடு இடம்பெற்றிருந்தது.

கொழும்பிலிருந்து கிளிநொச்சிக்கு சென்ற சிரேஷ்ட பத்திரிகையாளர்களில் வீரகேசரி ஆசிரியர்களாக இருந்த ஆ. சிவநேசச்செல்வன், எஸ். நடராஜா, மற்றும் சிங்களப் பத்திரிகைகளின் மூத்த பத்திரிகையாளர்கள் பலரும் வந்திருந்தனர். இவர்களில், பல துணிச்சலான தகவல்களை அக்காலத்தில் வெளியிட்டு வந்த ராவய பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவனும் முக்கியமானவர்.

நோர்வேயின் அனுசரணையுடனான அந்தப் பயணத்தை ஒழுங்கு செய்வதில் 'லங்காதீப' பத்திரிகையின் சிரேஷ்ட பத்திரிகையாளர் உபுல் ஜோசப் பெர்னாண்டோ முன்னின்றிருந்தார்.


கிளிநொச்சி சென்றடைந்த பத்திரிகையாளர்களை அன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடகத்துறை இணைப்பாளராக பணியாற்றிய தயா மாஸ்டர் என்றழைக்கப்பட்ட வே. தயாநிதி வரவேற்று மல்லாவியிலிருந்த புலிகளின் விருந்தினர் விடுதியில் தங்க வைத்தார்.

மல்லாவி செல்லும் பாதையில் எமது பஸ் வண்டி சாரதி அன்று வீதி விளக்குகள் இல்லாத நிலையில் பாதையை தவறவிட்டிருந்தார். நீண்ட தூரம் சென்றமையால் கச்சிதமாக அந்தப் பெரிய பஸ் வண்டியைத் திருப்புவதற்கு முடியாமல் பின்னோக்கியே நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருந்தது. அந்தப் பஸ் வண்டியின் மங்கலான பின்புற வெளிச்சத்திலேயே பாதையை நோட்டமிட வேண்டியிருந்தது. அச்சமயம் லசந்த விக்கிரமதுங்க என்னை தன்னுடன் உதவிக்கு வருமாறு அழைத்து இருவருமே அந்தப் பஸ் வண்டியின் பின்புற நீண்ட இருக்கையில் முழங்காலை மடித்து நின்றவாறு பஸ் வண்டியை பின் புறமாக வழி நடத்திக் கொண்டிருந்தோம். சுமார் அரை மணிநேரம் வரை நானும் லசந்தவும் அந்த நீண்ட பஸ் வண்டியை பின் இருக்கையில் முழந்தாளிட்டு இருந்தவாறு வழிநடத்தியமையும் லசந்த விக்கிரமதுங்க அவ்வப்போது வேடிக்கையாக என்னோடு பேசி வந்ததும் நினைவில் பசுமையாக இருக்கின்றது.

மறுநாள் நாமெல்லோரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனை அவரின் கிளிநொச்சி காரியாலயத்தில் சந்தித்தோம். அப்போது அனைத்து பத்திரிகையாளர்களும் ஏற்றுக்கொண்டமைக்கு அமைவாக லசந்த விக்கிரமதுங்கவும் , ராவய ஆசிரியர் விக்டர் ஐவனுமே தமிழ்ச்செல்வனிடம் கேள்விகளைக் கேட்டனர்.

இந்நிலையில் ஒரு சட்டத்தரணியாகவும் பணியாற்றிய லசந்த விக்கிரமதுங்க மறைந்து கடந்த 8ஆம் திகதியோடு 13 ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ள இந்தத் தருணத்தில் அவரோடு தமிழீழ விடுதலைப் புலிகளை சந்திக்க கிளிநொச்சி சென்றமையே நினைவில் நிழலாடுகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு

ஜனவரி - 10 திங்கட்கிழமை
பிலவ வருடம் - மார்கழி - 26

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 6.00 - 7.30 |
| ராகு காலம் | : | 7.30 - 9.00 |
| திதி | : | அஷ்டமி |



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
முந்தைய நாளின் முயற்சி காரணமாக சிறு வெற்றி உண்டு. குழந்தைகளுக்கு எதிர்பார்த்திருந்த நன்மை ஒன்று வரும். வியாபார விஷயமாக மேற்கொள்ளும் பயணம் லாபகரமாக அமையும்.

**இடபம்**
எதிர்பார்த்த பணம் கிடைக்கும். குழந்தைகளால் பெருமிதம் ஏற்படும். பெரிய இடத்திலிருந்து அழைப்பு வந்து உங்களை மகிழ்விக்கும். அடமானத்தில் இருக்கும் நகையை, வீட்டை மீட்பீர்கள்.

**மிதுனம்**
அலுவலக சம்பந்தமான முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள். நிம்மதியும் சந்தோஷமும் அடையும் படியான செய்தி வரும். குடும்பத்தினரின் செயல்பாடுகளால் மனநிறைவு கிடைக்கும்.

**கடகம்**
நீண்ட நாளாக இருந்த அலைச்சல், மன உளைச்சல் முடிவுக்கு வரும். தாய்வழி உறவினர்களுடன் இருந்த மன வருத்தம் தீரும். கடன் பாக்கி வசூல் செய்வதில் வெற்றி கிடைக்கும்.

**சிம்மம்**
வீடு மாற இடம் பார்த்தவர்களுக்கு நல்ல பகுதியில் வசதியான வீடு அமையும். அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். செயலில் கவனம் தேவை. சொத்து சம்பந்தமான விஷயம் ஒன்று சாதகமாக முடியும்.

**கன்னி**
கடன் கொடுத்தல், வாங்குதல் விஷயத்தில் கவனமாக இருங்கள். பணியிடத்தில் சலுகைகள் கிடைக்கும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. வசீகரப் பேச்சால் பிறரை கவர்வீர்கள். நட்பு வட்டம் விரியும்.

**துலாம்**
சுப விஷயத்தில் இருந்து வந்த தடைகள் அனைத்தும் நீங்கும். கடனாக கொடுத்த பணம் வசூலாகும். மகிழ்ச்சி அதிகரிக்கும். நகை, பொருட்களை வாங்குவீர்கள். பேச்சில் கவனம் தேவை.

**விருட்சிகம்**
பணியில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. மருத்துவச் செலவு ஒன்று வந்து நீங்கும். பயம் தீரும். புதிய முயற்சியில் இறங்கும் முன் தீர யோசிக்கவும். மகிழ்ச்சியான நாள்.

**தனுசு**
உங்களின் விருப்பம் ஒன்று நிறைவேறும். மகிழ்ச்சி கூடும். உடல் ஆரோக்கியம் மேம்படும். மருத்துவ செலவுகள் குறையும். குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். நிம்மதி அதிகரிக்கும்.

**மகரம்**
கருத்து வேறுபாடு உள்ளவருடன் வாக்குவாதம் செய்ய வேண்டாம். பிரிந்தவர்கள் ஒன்று சேர்வார்கள். சகோதரர் உதவுவார். பொழுது போக்கு அம்சங்களில் கூடுதல் ஆர்வம் ஏற்படும்.

**கும்பம்**
பணிகளை கவனச்சிதறலின்றிச் சிறப்பாக செய்யுங்கள். மருத்துவச் செலவு ஒன்று ஏற்படலாம். தொழில் சீராக இருக்கும். சில சிரமங்களை சந்தித்தாலும் அவற்றை எளிதாக சமாளிப்பீர்கள்.

**மீனம்**
பழைய பாக்கிகளை வசூலிப்பதில் கடுமை காட்ட வேண்டாம். மகிழ்ச்சியான நாள். பிறருக்கு கடன் கொடுப்பதை தவிர்க்க வேண்டும். கூடுதலாக உழைத்து நன்மை காண்பீர்கள். நட்பு வட்டம் விரியும்.

# தமிழ்நாட்டில் ஊரடங்கை அமுலாக்க தேவையில்லை

## உலக சுகாதார அமைப்பின் தலைமை விஞ்ஞானி

சென்னை, ஜன. 10

தமிழ்நாட்டில் மூன்றாவது அலையை தடுக்க முழு ஊரடங்கு தேவையில்லை என்று உலக சுகாதார அமைப்பின் தலைமை விஞ்ஞானி சௌமியா சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

சென்னை திருவான்மியூரில் எம்.எஸ்.சுவாமிநாதன் அறக்கட்டளை சார்பில் ஊட்டச்சத்து தாவர விழிப்புணர்வு தோட்டம் திறக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியில் உலக சுகாதார அமைப்பின் தலைமை விஞ்ஞானி சௌமியா சுவாமிநாதன் கலந்து கொண்டு பேசியபோது இதனைத் தெரிவித்தார்.



அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், “சமீபத்தில் நடத்திய ஆய்வுகள் மூலம் நாட்டில் தொற்று நோய் அல்லாத நோய்கள் அதிகமாகிக் கொண்டே செல்கிறது. இன்னும் வருகிற காலங்களில் உயர் இரத்த அழுத்தம், ஊட்டசத்து குறைபாடு, இரத்தசோகை உள்ளிட்ட பாதிப்புகள் அதிகரிக்கக் கூடும். அதை தடுப்பதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதில்தான் கவனம் செலுத்த வேண்டும்” என்று கூறினார்.

கொரோனா வைரஸ் குறித்து பேசிய அவர், “கொரோனா முதல் அலை ஏற்பட்டபோது, அந்த வைரஸ் குறித்தான தகவல்கள் எதுவும் தெரியாததால் பலநாடுகள் என்ன செய்வதென்று தெரியாமல், தொற்று பரவலைத் தடுக்க ஊரடங்கை அமுல்படுத்தின. ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளில் கொரோனா பற்றி அதிகமாக தெரிந்து கொண்டு வருகிறோம். அது எப்படி பரவுகிறது என்பது நமக்கு தெரியும்.

தொற்று பரவலை தடுக்கும் வழிமுறைகள் குறித்தும் நமக்கு தெரியும். அந்த வழிமுறைகளை மக்கள்தவறாமல் பின்பற்ற வேண்டும். முகக்கவசம் அணிதல் உள்ளிட்டவற்றை பின்பற்றினாலே மூன்றாவது அலையை கடந்துவிடலாம். அதனால் தமிழ்நாட்டில் முழு ஊரடங்கிற்கு தேவையில்லை.

ஒமைக்ரோன் தீவிர பாதிப்புகளை ஏற்படுத்தாவிட்டாலும் அதன் பரவல் வேகம் நான்கு மடங்காக உள்ளது. அதனால் மக்கள் முன்னெச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். கொரோனா தொற்று கடைசி வரை நம்முடன் தொடர்ந்து பயணிக்கும், அதனால் மக்கள் வழிகாட்டு நெறிமுறைகளை தவறாமல் கடைபிடிக்க வேண்டும்” என்று கூறினார்.

---

# தமிழகத்தில் அதிகரிக்கும் கொரோனா; அதிகாரிகளுடன் ஸ்டாலின் ஆலோசனை

சென்னை, ஜன. 10

தமிழகத்தில் நடைமுறைப் படுத்தப்பட்ட இரவு நேர ஊரடங்கு தொடரும் நிலையில், மருத்துவ நிபுணர்கள், அதிகாரிகளுடன் முதல்வர் ஸ்டாலின் இன்று ஆலோசனை நடத்த உள்ளார்.



தமிழகத்தில் கொரோனா, ஒமைக்ரோன் பரவலைக் கட்டுப்படுத்துவது குறித்து, முதல்வர் ஸ்டாலின் தலைமையில் கடந்த ஜன.4 ஆம் திகதி ஆலோசனைக் கூட்டம் நடந்தது. இதில் எடுக்கப்பட்ட முடிவின்படி, கடந்த 6ஆம் திகதி முதல் இரவு நேர ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது. அதன்படி, இரவு 10 மணி முதல் மறுநாள் காலை 5 மணி வரை குறிப்பிட்ட அத்தியாவசிய சேவைகள் தவிர, மற்ற அனைத்துக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை முழு ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது. இரவு நேர ஊரடங்கும் இரவு 10 மணி முதல் காலை 5 மணி வரை ஊரடங்கு தொடர்ந்து அமலில் இருக்கும்.

தமிழகத்தில் நேற்றுமுன் தினம் கொரோனா தொற்று 10 ஆயிரத்தைக் கடந்துவிட்டது. தமிழகம் முழுவதும் 10,978 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. சென்னையில் மட்டும் 5,098 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் தமிழகத்தில் ஊரடங்கு நிறைவடைகிறது. இதனைத் தொடர்ந்து மருத்துவ நிபுணர்கள், அதிகாரிகளுடன் தலைமைச் செயலகத்தில் இன்று முதல்வர் ஸ்டாலின் ஆலோசனை நடத்த இருக்கிறார். ஆலோசனைக் கூட்டம் இன்று காலை 11 மணிக்குத் தொடங்குகிறது.

இதேவேளை முழுநாள் ஊரடங்கு காரணமாக தமிழகத்தின் நேற்று அனைத்து செயற்பாடுகளும் ஸ்தம்பித்திருந்தது.

---

# நீட் தேர்வை பா.ஜ.க. ஆதரிப்பது தமிழக மக்களுக்கு செய்யும் துரோகம்: கனிமொழி

சென்னை, ஜன. 10

நீட் தேர்வை பாரதிய ஜனதா ஆதரிப்பது தமிழக மக்களுக்கு செய்யும் பெரும் துரோகம் ஆகும் என்று கனிமொழி எம்.பி. தெரிவித்துள்ளார்.



தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தில் கனிமொழி எம்.பி. நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

“தி.மு.க. மட்டுமின்றி பெரும்பாலான அரசியல் இயக்கங்களும், பொதுமக்களும் எதிர்க்கக்கூடிய நீட் தேர்வு சமூக நீதி கொள்கைக்கு எதிரானது. நீட் தேர்வில் தமிழக மாணவர்கள் பாதிக்கப்பட்டு வருகிறார்கள் என்பதால் அதனை எதிர்க்கிறோம். தமிழகத்தை பொறுத்தவரை நீட் தேர்வு தேவையில்லை என்பதால் அதை ரத்து செய்ய வேண்டும் என்று தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகிறோம்.

நீட் தேர்வுக்கு எதிராக முதல்- அமைச்சர் மு.க.ஸ்டாலின் பலமுறை சட்டமன்றத்தில் பேசி இருக்கிறார். ஜனாதிபதியை சந்தித்து நீட் தேர்வை ரத்து செய்யும் கோரிக்கையை வலியுறுத்தும் முதல் முயற்சியை தி.மு.க. எடுத்துள்ளது. நீட் தேர்வை பாரதிய ஜனதா ஆதரிப்பது என்பது தமிழக மக்களுக்கு செய்யும் பெரும் துரோகம் ஆகும்.” இவ்வாறு அவர் கூறினார்

# உள்ளூராட்சி தேர்தல் ஒரு வருடம் ஒத்திவைப்பு

## அடுத்த வாரம் வர்த்தமானி

கொழும்பு, ஜன. 10

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மேலும் ஒரு வருடத்திற்கு பிற்போடுவது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் வாரத்தில் வெளியிடப்படவுள்ளது.**

இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்கவின் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான விடயங்களை நீக்கி குறித்த வர்த்தமானி வெளியிடப்படவுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்கவுக்கு கோவிட்-19 தொற்றுறுதியாகியுள்ளமையினால் அவரால் தேர்தலை பிற்போடுவது தொடர்பான வர்த்தமானியை வெளியிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடுவதானால் அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்கவினால் வெளியிடப்படவேண்டும்.

எவ்வாறாயினும் கோவிட்-19 தொற்றுறுதியாகியுள்ள இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க, இங்கிலாந்தில் உள்ளமையினால் வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்கு முடியாமல் உள்ளது.

இந்தநிலையில் தேர்தலை பிற்போடுவதற்கான இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்கவின் உள்ளூராட்சிமன்ற தேர்தல் தொடர்பான விடயங்களை நீக்கி மற்றுமொரு அமைச்சுக்கு வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய மற்றுமொரு அமைச்சின் ஊடாக குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எதிர்வரும் மார்ச் மாதம் 20ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

தேர்தல் ஓராண்டு பிற்போடப்பட்டால் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 20ஆம் திகதி கட்டாயமாகத் தேர்தல் நடத்தப்படவேண்டும்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலை விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் ஓராண்டு காலப்பகுதிக்கு மாத்திரமே பிற்போட முடியும்.

இந்தநிலையில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தேர்தலை நடத்துவதற்குத் தயாராக உள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தகவல்கள் குறிப்பிடுகின்றன. (அ)

# என்ன நடக்கப் போகின்றது என்று தெரியாத அச்ச நிலையில் மக்கள்!

## ரிஷாத் பதியுதீன் எம்.பி தெரிவிப்பு



மன்னார், ஜன. 10

ஒரு சில அரசியல் தலைமைகள் இனவாத, மதவாத சூழலை இந்த நாட்டில் ஏற்படுத்தி, தாங்கள் ஆட்சிப்பீடத்தில் ஏற வேண்டும் என்பதற்காக இந்த நாட்டில் இனவாதத்தையும், மதவாதத்தையும் விதைத்து வந்துள்ளனர் என முன்னாள் அமைச்சரும்,வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவினால் ஆரம்பிக்கப்பட்ட "பிரபஞ்சம் செயற்திட்டம் நேற்று முன் தினம் மதியம் மன்னார் எருக்கலம்பிட்டி மத்திய மகளிர் மகாவித்தியாலயத்தில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்-

எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன் 50 கோடி டொலர் கடன் கட்ட வேண்டியவர்களாக இந்த அரசு இருக்கின்றது.

இந்த வருட இறுதிக்குள் இந்த நாட்டுக்கு என்ன நடக்கப் போகின்றது என்று தெரியாத ஓர் அச்ச நிலை ஏற்பட்டுள்ளது.

பொருட்களை இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வைத்தியசாலை பொருட்கள், உணவுப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் நிலை என்னவாகும் என்ற கேள்வி நாட்டில் ஏற்பட்டு இருக்கிறது.

இந்த நாட்டின் நலனுக்காகத்தான் இந்த நாட்டின் வரலாற்றில் நாங்கள் எல்லோரும் செயல்பட்டுக்கொண்டு இருக்கின்றோம்.

ஆனால் ஒரு சில அரசியல் தலைமைகள் இனவாதத்தையும், மதவாதத்தையும் கக்கி இனவாத,மதவாத சூழலை இந்த நாட்டில் ஏற்படுத்தி,தாங்கள் ஆட்சி பீடத்தில் ஏற வேண்டும் என்பதற்காக இந்த நாட்டில் இனவாதத்தையும், மதவாதத்தையும் விதைத்து வந்துள்ளதை நாங்கள் பார்க்கின்றோம்.

இனவாதமும், மதவாதத்தையும் மூலதனமாக கொண்ட அரசாங்கம் தான் இந்த இரண்டு வருட காலத்துக்குள் இவ்வாறான,மோசமான நிலைக்கு இந்த நாட்டை கொண்டு சென்றுள்ளார்கள் என்பது எம் எல்லோருக்கும் தெரியும்.

இன்று விவசாயிகள் வீதியில் இறங்கி போராடுகின்றார்கள். தங்கள் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்க விடுங்கள்.

தமது விவசாயத்துக்கு தேவையான பசளையை தாருங்கள் என்று வீதியில் போராடுகின்ற ஒரு மோசமான நிலை இந்த நாட்டில் ஏற்பட்டுள்ளது. கேசினை பெற்றுக்கொள்ள வரிசையில் நிற்கின்றனர்.ஒரு நாள் வேலையை விட்டு எரிவாயுவை பெற்றுக்கொள்ள வரிசையில் நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது உணவு பொருட்களுக்கு தட்டுப்பாடு,நினைக்க முடியாத அளவுக்கு பொருட்களின் விலையேற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது-என்றார்.

# மருந்துகளுக்கு கடும் தட்டுப்பாடு

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 10

இலங்கையில் உள்ள வைத்தியசாலைகளில் கடுமையான மருந்துத் தட்டுப்பாடு நிலவுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்துக்கான பயணத்தை மேற்கொண்டுள்ள அவர், மன்னாரில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைத்தபோதே இதனை கூறினார். நாட்டில் சகல விடயங்களுக்கும் நீண்ட வரிசையில் காத்திருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நாட்டுக்குத் தேவையான பொருட்களை இறக்குமதி செய்ய முடியாத நிலை தற்போது ஏற்பட்டுள்ளதாக இதன்போது கருத்துரைத்த பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியூதின் குற்றஞ்சாட்டினார். (அ)



# சீன வெளிவிவகார அமைச்சர் வாங்-யீயை விமான நிலையத்தில் வரவேற்றார் நாமல்!

கொழும்பு, ஜன. 10

சீன வெளியுறவு அமைச்சர் வாங்-யீ உத்தியோகபூர்வ பயணமாக நேற்று முன் தினம் இரவு இலங்கை வந்தடைந்த நிலையில் அவரை இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ விமான நிலையத்தில் வரவேற்றார்.

நேற்று முன் தினம் இரவு கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைத்தில் வாங்-யீ பயணித்த விமானம் தரையிறங்கியது.

சீனா- இலங்கை ஜனநாயக உறவுகளின் 65 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அவர் இலங்கை விஜயம் செய்துள்ளதாகக் கொழும்பிலுள்ள சீன தூதரகம் தெரிவித்துள்ளது.

கென்யா, எரித்திரியா, கொமொரோசு மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்த பின்னரே சீன வெளியுறவு அமைச்சர் இலங்கை வந்துள்ளார். (அ)

# டொலர் பற்றாக்குறையினால் எரிபொருள் பெறுவதில் சிக்கல்

## மின்வெட்டு தொடரும் அபாயம்

கொழும்பு, ஜன. 10

மோசமான டொலர் நெருக்கடியின் விளைவாக இலங்கை மின் உற்பத்தி நிலையங்களுக்கு தேவையான எரிபொருளை வாங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் நாட்டில் தொடர்ச்சியாக மின் வெட்டு ஏற்படும் சூழல் ஏற்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபைக்குத் தேவையான எரிபொருளை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வழங்காத காரணத்தால் ஏற்கனவே மின்வெட்டு அமுல் செய்யப்பட்டு வருகிறது.

இலங்கைக்குத் தேவையான மின்சார உற்பத்தியில் சுமார் 9 வீதம் எரிபொருள் மூலம் இயக்கப்படும் மின்பிறப்பாக்கிகளை நம்பியே உள்ளது என இலங்கை மின்சார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்நிலையில் மின் பிறப்பாக்கிகளுக்குத் தேவையான எரிபொருளை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் இருந்து கொள்வனவு செய்வதற்கு டொலர் இல்லை என அவர் கூறினார்.

இதனால் மின் உற்பத்தி, விநியோகத்தில் நிலக்கரி மற்றும் நீர் மின் உற்பத்தித் திட்டங்களையே நம்பியிருக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் பற்றாக்குறையைச் சமாளிக்க ஒரு மணி நேர சுழற்சி முறையான மின்வெட்டை அமுல் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என மின்சார சபை அதிகாரி குறிப்பிட்டார்.

எனினும் மின்வெட்டு எவ்வளவு காலம் நீடிக்கும்? என அவர் கூறவில்லை.

160 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் சப்புகஸ்கந்த மின் உற்பத்தி நிலையம் மற்றும் கொழும்பு துறைமுகத்தில் உள்ள 60 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் மின் பிறப்பாக்கி ஆகியவை சிக்கலில் உள்ளன.

இலங்கையின் கடுமையான அந்நியச் செலாவணி பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ள நிலையில் ஏற்கனவே பால் மா, சீனி, சமையல் எரிவாயு மற்றும் சீமெந்து உள்ளிட்ட பொருட்களை இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் இந்தப் பொருட்களுக்கு கடும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் பெற்றோல் மற்றும் டீசல் தட்டுப்பாடு ஏற்படலாம் என எரிசக்தி அமைச்சு எச்சரித்துள்ளது.

தற்போது கையிருப்பில் உள்ள எரிபொருட்கள் ஜனவரி மூன்றாவது வாரத்தில் தீர்ந்து விடும் என்று எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில கூறினார்.

நான் இந்த பிரச்னையை அமைச்சரவைக்கு எடுத்துரைத்துள்ளேன். டொலர் வருவாயில் ஒரு பகுதியை எண்ணெய் மற்றும் மருந்து இறக்குமதிக்காக ஒதுக்குவதை உறுதிப்படுத்துமாறு நான் பலமுறை அமைச்சரவையில் வலியுறுத்தியுள்ளேன் எனவும் கம்மன்பில கூறினார்.(அ)

# இராஜாங்க அமைச்சுப் பதவியை ஏற்க மறுத்த எஸ்.பி. திஸாநாயக்க

கொழும்பு, ஜன. 10

இராஜாங்க அமைச்சு பதவியை ஏற்பதற்கு ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க மறுப்பு தெரிவித்துவிட்டாரென அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

இராஜாங்க அமைச்சு பதவியிலிருந்து சுசில் பிரேமஜயந்த நீக்கப்பட்டுள்ள நிலையில், அவர் வகித்த அமைச்சு பொறுப்புகள் - விடயதானங்கள் எஸ்.பி. திஸாநாயக்கவிடம் கையளிப்பதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டது.

அரச மேல் மட்டத்திலிருந்து இது தொடர்பில் எஸ்.பி. திஸாநாயக்கவிடம் கோரிக்கையும் முன்வைக்கப்பட்டுள்ளது. எனினும், இராஜாங்க அமைச்சுப் பதவியை ஏற்பதற்கு அவர் மறுப்பு தெரிவித்துள்ளார்.

எனினும், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு பதவியொன்றையே எஸ்.பி. திஸா நாயக்க எதிர்ப்பார்க்கின்றெனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# 6.8 மில்லியன் தடுப்பூசிகள் நன்கொடையாக கிடைத்தன

கொழும்பு, ஜன. 10

இலங்கைக்கு 6.8 மில்லியன் தடுப்பூசிகள் நன்கொடையாக கிடைத்துள்ளதுடன், அவை சீனா , அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ளன என அரச மருந்தாக்கட் கூட்டுதாபனத்தின் தலைவர் விசேட வைத்தியர் பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அத்துடன் இலங்கைக்குத் தேவையான கொரோனா தடுப்பூசிகள் மற்றும் பூஸ்டர் தடுப்பூசிகள் என்பன இதுவரை போதுமானளவு கிடைத்துள்ளன.

இதற்கமைய, இதுவரை அஸ்ட்ரசெனேகா, சினோபாம், ஸ்புட்னிக், மொடர்னா மற்றும் பைசர் என 4கோடியே 85 இலட்சத்து 60 ஆயிரம் தடுப்பூசிகள் கிடைக்கப் பெற்றுள்ளன- என்றார். (அ)

## கைச்சாத்தான புதிய ஒப்பந்தத்தால்

# திருமலை துறைமுகத்துக்குள் நுழையுமா இந்திய கடற்படை?

**கொழும்பு, ஜன. 10**

**திருகோணமலை எண்ணெய் குதங்கள் தொடர்பில் புதிய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ள நிலையில், அதன் மூலம் இந்திய கடற்படையினர் திருகோணமலை துறைமுகத்துக்குள் நுழைய முடியும் என வெளியிடப்பட்டுவரும் கருத்துகளை வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில நிராகரித்துள்ளார்.**

வலுசக்தி அமைச்சில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

திருகோணமலை எண்ணெய் குதங்கள் தொடர்பில் கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தத்துக்கு சில தரப்புகள் எதிர்ப்பை வெளியிட்டுவருகின்றன. 2003 ஆம் ஆண்டில் 99 எண்ணெய் குதங்களையும் இந்தியாவுக்கு வழங்கும்போது ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடாதவர்கள், இவ்வாறு வழங்கப்பட்ட எண்ணெய் குதங்களில் 85 வீதமானவற்றை இலங்கையின் நிர்வாகத்தின்கீழ் எடுக்கும்போது மட்டும் எதிர்ப்பை வெளியிடுவது ஏன் என்ற சந்தேகம் எழுகின்றது.

அதேபோல 2ஆவது உலகப் போருக்கு பின்னர் சுமார் 100 ஆண்டுகளாக பயன்படுத்தப்படாத - பழுதடைந்துவரும் நிலையில் உள்ள எண்ணெய் குதங்களை நாட்டு மக்களின் நன்மைக்காக பயன்படுத்த தயாராகும்போது எதிர்ப்பு வருவது ஏன்? இது தேசப்பற்றா அல்லது இந்தியா மீதான பற்றா?

அதேவேளை, புதிய உடன்படிக்கை மூலம் திருகோணமலை துறைமுகத்துக்குள் இந்திய கடற்படை வரமுடியும் என சிலர் கருத்துகளை பரப்பி வருகின்றனர். இது போலியான தகவலாகும் . 99 எண்ணெய் குதங்களும் இந்தியாவின் நிர்வாகத்தின்கீழ் இருக்கும் போது, அதனை அடிப்படையாக வைத்து இந்திய கடற்படையினர் திருமலை துறைமுகம் வந்தனரா? இல்லை.

99 எண்ணெய் குதங்கள் இருக்கும்போது வராத இந்திய கடற்படை, 14 குதங்கள் இருக்கும்போது வருமா?-என்றார். (அ)

# வெளிநாடுகளை நம்பி இருக்காமல் எமது வளத்தை பயன்படுத்துவோம்

## சட்டத்தரணி சுகாஷ் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 10

வெளிநாடுகளை நம்பி இருக்காது எமது பகுதியில் உள்ள வளங்களை நாங்கள் பயன்படுத்த வேண்டும். நாம் வெறுமனே கோரிக்கையை மாத்திரம் விடாது தற்சார்பு பொருளாதார கட்டமைப்பை வலுப்படுத்தும் வகையில் களத்தில் இறங்கவுள்ளோமென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரட்ணம் சுகாஷ் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதார நிலை பற்றி சிந்திக்க வேண்டிய நிலையில் தமிழ் சமூகம் காணப்படுகின்றது. டொலரின் கையிருப்பு மிகவும் குறைந்து வருகின்றது. நாட்டின் பொருளாதாரம் பற்றி அபாயகரமான கருத்துக்கள் வெளியாகி வருகின்றது.

பிரித்தானியாவில் இருந்து வெளிவரும் கார்டியன் பத்திரிகை இந்த வருடத்தில் இலங்கை திவாலாகும் என்ற விடயத்தை வெளிப்படுத்தியுள்ளது. கார்டியன் பத்திரிகையில் உள்ள விடயங்கள் இலங்கையில் நிதர்சனமாகி வருகிறது. அது மாத்திரமல்லாமல் கார்டியன் பத்திரிகையினுடைய கருத்தை உறுதிப்படுத்துவது போல அரிசி உற்பத்தியாளர் சங்கம் எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் இலங்கையில் அரிசி ஒரு கிலோ 300 ரூபாயை தாண்டும் என்று தெரிவித்துள்ளது. இதைவிட இலங்கை பஞ்சத்துக்கு தள்ளப்படும் என்றும் எதிர்வு கூறியுள்ளது.

இதை வெறுமனே இலங்கைக்கு மட்டுமான பாதிப்பாக கருதிவிட முடியாது. ஏனென்றால் இலங்கையில் வடக்கு கிழக்கு தமிழ் தேசம் மிக மோசமாக ஓரவஞ்சனையாக அரசாங்கத்தால் நடத்தப்படும் என்பது தெரிந்த விடயம். பஞ்சம் ஏற்பட்டால் எதிர்காலத்தில் அதை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்பதில் நாம் சிந்திக்க வேண்டும்.

தமிழ் மக்களுடைய பிரதிநிதிகள் என்ற வகையில் எங்களுடைய மக்களை வழிநடத்த வேண்டிய பொறுப்பு எமக்குள்ளது.

அந்த வகையில் நாங்கள் எம் பொருளாதாரக் கட்டமைப்பின் அடிப்படைகளான விவசாயம், மீன்பிடியில் தற்சார்பு பொருளாதார கட்டமைப்பை விருத்தி செய்யவேண்டும்.

இதை செய்யாவிட்டால் எங்கள் தமிழ் மக்கள் மிக மோசமான நிலைமையை நோக்கி தள்ளப்படுவதை எவராலும் தடுக்க முடியாது. ஆகவே வடக்கு விவசாய அமைப்புகள், கால்நடை அமைப்புகள், இளைஞர் கழகங்கள் சமூக அமைப்புகள் எல்லாம் இதற்கு முன்வரவேண் டும்.

வீட்டிலேயே தோட்டம் செய்யக்கூடிய வசதியுள்ளவர்கள் தங்களால் பயிரிடக்கூடிய பயிர்களை வீட்டுத் தோட்டத்தில் பயிரடவேண்டும். விவசாயிகள் தங்களால் முடிந்த அளவுக்கு விவசாய உற்பத்திகளை செய்து சேமித்து வைக்க வேண்டும். அதிலும் குறிப்பாக குறுங்காலப் பயிர்களை மேற்கொள்ளவேண்டும். ஏப்ரல் மாதம் சிவப்பு எச்சரிக்கை காட்டப்பட்டுள்ள நிலையில் சில மாதங்களுக்குள் பயன்தரக் கூடிய குறும்பயிர்களை விவசாயிகள் பயிரிடவேண்டும்

வெளிநாடுகளை நம்பி இருக்காது எமது பகுதியில் உள்ள வளங்களை நாங்கள் பயன்படுத்த வேண்டும். நாம் வெறுமனே கோரிக்கையை மாத்திரம் விடாது தற்சார்பு பொருளாதார கட்டமைப்பை வலுப்படுத்தும் வகையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைமை இளைஞர் அணியை களத்தில் இறக்கி ஈடுபடவுள்ளது.

அந்தந்த பிரதேசங்களில் மூலப்பொருட்களைக் கொண்டு முடிவுப் பொருளை உற்பத்தி செய்வதற்காக சிறு கைத்தொழிலை ஆரம்பிக்கவுள்ள ஆர்வமுடைய இளைஞர்கள் சரியான செயல் திட்டங்களுடன் எம்மை தொடர்பு கொள்ளலாம். அதற்கான வசதிகளை உதவிகளையும் வழங்க நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

வீட்டுத் தோட்டங்களில் சிறு பயிர்கள் செய்ய விரும்புவர்கள் எமது பிரதேச அமைப்பாளர்கள் தொடர்புகொண்டு உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்-என்றார். (அ)

# மலையக, முஸ்லிம் கட்சிகள் வழங்கிய பேராதரவுக்கு நன்றி!

## ரெலோ கட்சி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 10

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்புவதற்காக ஆவணத் தயாரிப்பு உட்பட அனைத்துச் செயல்பாடுகளுக்கும் பேராதரவு வழங்கிய மலையக மற்றும் முஸ்லிம் கட்சிகளுக்கு நன்றிகளைத் தெரிவிப்பதாக ரெலோ அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர், குருசுவாமி சுரேந்திரன் விடுத்துள்ள அறிக்கையில்,

“தமிழ் பேசும் மக்களின் கட்சிகள் ஒன்று சேர்ந்து இந்திய பிரதமருக்கு அரசமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தக் கோருவதன் மூலம் மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை பகிர்ந்து மக்கள் முகம் கொடுத்திருக்கும் தற்போதைய பிரச்னைகளில் இருந்து, மீட்கும் முயற்சியை மேற்கொண்டிருந்தோம்.

வடக்கு, கிழக்கை மையப்படுத்திய கட்சிகள் ஒருமித்த நிலைப்பாட்டில் அந்த முயற்சியை முன்னெடுத்திருந்த போது, மலையக மற்றும் முஸ்லிம் கட்சிகளின் ஆதரவையும் பலத்தையும் கோரிநின்றோம். எவ்வித தயக்கமும் இல்லாது எமது முயற்சிக்கு நலமும் பலமும் சேர்க்கும் வகையில் நம்மோடு தோளோடு தோள் நின்று பயணிக்க முன் வந்தமைக்கு நன்றி கூறுகிறோம். இதனால் எமக்கு உத்வேகம் தந்துள்ளீர்கள்.

அனைத்து தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளையும் பிரதிபலிக்கும் வகையான வரைபை தயாரிக்க முற்பட்ட போதும் எமது அடிப்படை கோரிக்கைகளான தாயகம், சுயநிர்ணய உரிமை, சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு என்பவற்றில் நம்மால் விட்டுக்கொடுக்க முடியாத சூழ்நிலையை நீங்கள் புரிந்து கொண்டீர்கள். அதேநேரம் அதில், உங்களால் கையொப்பமிட முடியாத இக்கட்டான நிலையையும் நாங்களும் விளங்கிக் கொண்டோம். இருப்பினும் உங்களால் முன்வைக்கப்பட்ட மலையக மக்களின் கரிசனைகளையும் பிரதிபலித்துள்ளோம் என்பதையும் தெரிவித்து கொள்கிறோம்.

எமது மக்கள் எதிர்கொண்டிருக்கும் அரசியல் இக்கட்டிலிருந்து எம் மக்களை மீட்க நாம் முற்பட்ட பொழுது எமது தரப்பிலிருந்து எம்மை விமர்சித்தும், எதிர்ப்புகளை வெளியிட்டும், கருத்துக்களை பதிவிட்டும் தடுக்கும் முயற்சியிலும் சுயவிளம்பரங்களை தேடுவதிலும் ஈடுபட்டிருந்த வேளையில் உங்களது நாகரிகமான நடைமுறை அவர்களுக்கு ஒரு பாடமாக அமையும் என்று நம்புகிறோம்.

உங்களின் அனைத்து முயற்சிகளிலும் எங்கள் ஆதரவு என்றும்போல் தொடர்ந்தும் இருக்கும் என்பதை உறுதியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம். அதேவேளை எம்மக்களின் விடிவுக்கான தொடர் பயணத்தில் நீங்கள் தொடர்ந்தும் எம்முடன் பயணிக்க விருப்புடன் கோரி நிற்கிறோம் - என்றுள்ளது. (ஐ)

# ஒன்றுபட்ட, பிரிக்கப்படாத நாட்டில் தமிழ் பேசும் மக்கள் சுயநிர்ணய உரிமையை பிரயோகிக்க வழி ஏற்படவேண்டும்

## மோடிக்கு தமிழர் தரப்பு வரைந்த ஆவணத்தில் உள்ளடக்கத்தில் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 10

**ஒன்றுபட்ட, பிரிக்கப்படாத நாட்டின் கீழ் தமிழ் பேசும் மக்கள் தமது வரலாற்றுச் சிறப்புமிக்க வாழ்விடப் பிரதேசங்களில் கௌரவமாகவும், சுயமரியாதையுடனும், அமைதியுடனும், பாதுகாப்புடனும் வாழவும், அவர்களின் சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிக்கவும் வழியேற்படுத்தப்படவேண்டும் என தமிழ்க் கட்சிகளால் இந்தியப் பிரதமருக்கு அனுப்பப்படவுள்ள ஆவணத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.**

**இந்தியப் பிரதமருக்கு தமிழ்க் கட்சிகளால் அனுப்பப்படும் தமிழ் மக்களின் தீர்வுகள் தொடர்பான ஆவணத்தில் உள்ளடங்கியுள்ள விவரங்கள் வெளியாகியுள்ளன.**

இந்தியப் பிரதமருக்கு அனுப்பப்படவுள்ள இந்த ஆவணம் எதிர்வரும் 11ஆம் திகதி இலங்கையிலுள்ள இந்திய தூதரகத்தில் கையளிக்கப்படவுள்ளது.

1997 ஆம் ஆண்டு முதல் பதவியில் இருந்து வரும் இலங்கை அரசாங்கங்கள் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு வலியுறுத்தவேண்டும் என்று இந்த ஆவணத்தில் இந்திய பிரதமரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் விதிகளை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். அத்துடன் ஒன்றுபட்ட, பிரிக்கப்படாத நாட்டின் கீழ் தமிழ் பேசும் மக்கள் தமது வரலாற்றுச் சிறப்புமிக்க வாழ்விடப் பிரதேசங்களில் கௌரவமாகவும், சுயமரியாதையுடனும், அமைதியுடனும், பாதுகாப்புடனும் வாழவும், அவர்களின் சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிக்கவும் வழியேற்படுத்தப்படவேண்டும் என்று இந்த ஆவணத்தில் தமிழ் கட்சிகள், இந்தியப் பிரதமரிடம் கோரியுள்ளன.

இதன்படி இந்தியப் பிரதமருக்கு அனுப்பப்படவிருந்த ஆவணத்தின் உள்ளடக்கங்கள் பின்வருமாறு:

1) இந்திய-இலங்கை உடன்படிக்கையின்கீழ் நடைமுறைக்கு வந்த பதின்மூன்றாவது திருத்தத்தின் கீழ் ஒப்புக் கொள்ளப்பட்ட ஏற்பாடுகளிலிருந்து சட்டம் மற்றும் ஒழுங்கு, நிதி, நிலம், கல்வி, கமநல சேவைகள் போன்றவை தொடர்பான அனைத்து ஏற்பாடுகளும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக் குழுவிற்கு வழிவகை செய்யுமாறு இலங்கை அரசாங்கத்தைக் கோரவேண்டும்.

2) பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட உடனேயே 1988 டிசெம்பர் 17 அன்று பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பின் பதினாறாவது திருத்தத்தின் ஏற்பாடுகள் வார்த்தையிலும், உணர்விலும் செயல்படுத்தப்பட வேண்டும்.

பதின்மூன்றாவது மற்றும் பதினாறாவது திருத்தங்களில் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளையும் தேசிய மொழிகளாகவும், ஆங்கிலத்தை இணைப்பு மொழியாகவும் அங்கீகரிப்பதும், சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டும் அரசாங்கப் பாவனைக்கான மொழிகளாகப் பயன்படுத்தப்படுவது, முழுமையாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்.

இலங்கையின் அரசியலமைப்பின்படி தேசிய மொழிகள், நிர்வாகம், சட்டம், நீதித்துறை மற்றும் பாடசாலைகளில் பயிற்றுவிக்கும் ஊடகம் ஆகியவை முழுமையாக நடைமுறைப் படுத்தப்படவேண்டும்.

3)பண்டாசெல்வா ஒப்பந்தம் (1957), டட்லி-செல்வா ஒப்பந்தம் (1965) மற்றும் இந்திய-இலங்கை ஒப்பந்தம் (1987) ஆகியவற்றின் விதிகளுக்கு மாறாகச் செயற்படும், வடக்கு மற்றும் கிழக்கின் மக்கள்தொகை அமைப்பை முறையாக மாற்றுவதற்கான அனைத்து முயற்சிகளும் உடனே நிறுத்தப்படவேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கில் தமிழர்களின் பாரம்பரிய தாயகத்தின் வரலாற்று வாழ்விடங்களை அழிக்கும், தொல்பொருள் திணைக்களம், மகாவலி அதிகாரசபை, வனத் திணைக்களம், வனவிலங்கு திணைக்களம், சுற்றுலா சபை மற்றும் பாதுகாப்பு/உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றின் அனைத்து நடவடிக்கைகளும் முயற்சிகளும் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

தொல்பொருள் திணைக்களமானது பௌத்த சமய காலத்திற்கு முற்பட்ட தமிழர்களின் தொன்மையை அங்கீகரித்து, இலங்கையில் பௌத்தத்தை (தமிழ் பௌத்தர்கள்) ஏற்றவர்கள் தமிழர்கள் என்பதை ஏற்று, வரலாற்றை சிதைக்காமல் அதன்படி செயற்பட வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு இடையில் உள்ள எல்லைப் பகுதிகளிலுள்ள தமிழ்க் கிராமங்களை சிங்களப் பகுதிகளுடன் இணைத்து அல்லது சிங்களக் கிராமங்களை தமிழ் பகுதிகளுக்குள் கொண்டு வருவதன் மூலம் தமிழர்களை அவர்களது சொந்தப் பகுதிகளில் சிறுபான்மையினராக்கும் வகையில் இன அமைப்பு மாற்றியமைக்கப்படுகிறது.

இதன்மூலம் உள்ளூராட்சி சபைகள், மாகாண சபைகள் மற்றும் பாராளுமன்றத்தில் தமிழ் மக்கள் அரசியல் பிரதிநிதித்துவம் பெறுவதை தடுக்கும் செயல்கள் நிறுத்தப்பட வேண்டும்.

4) நேரு-கொத்தலாவல (1954), சிறிமாவோ-சாஸ்திரி (1964) மற்றும் சிறிமாவோ-இந்திரா (1974) ஆகிய இலங்கை அரசாங்கத்திற்கும், இந்திய அரசாங்கத்திற்கும் இடையேயான ஒப்பந்தங்களின் நோக்கம் மற்றும் உணர்வு, இவை இரண்டும் உறுதி செய்யப்படவேண்டும்.

நில உரிமை, வீட்டு உரிமை, வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் மற்றும் அரசியல் பிரதிநிதித்துவம் ஆகிய துறைகளில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த இலங்கைத் தமிழ் மக்களுக்கு சம உரிமைகள் பாரபட்சமாக மீறப்பட்டு புறக்கணிக்கப்படுகின்றன. சம உரிமைகள் மற்றும் பாகுபாடுகளின் இந்த மறுப்பு, முழு அளவிலான சம குடியுரிமையை நோக்கி உடனடியாக மாறவேண்டும்.

5)முக்கியமாக தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிராக பயன்படுத்தப்படும் பயங்கரவாத தடைச்சட்டம் உடனடியாக நீக்கப்படவேண்டும் மற்றும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் உள்ள அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும்.

6) இலங்கைத் தீவில் பரவலாக உள்ள பல கட்சி ஜனநாயக கட்டமைப்பிற்குள் சிங்கள, தமிழ், முஸ்லிம் அல்லது வேறு சிறுபான்மையினராக சிதறி வாழும் இன மற்றும் அரசியல் தேசிய இனங்கள் மற்றும் சிறுபான்மையினருக்கு போதுமான பிரதிநிதித்துவத்தை பெறும் நோக்கில், அத்தகைய ஆர்வமுள்ள குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சிறிய அரசியல் கட்சிகள் பாராளுமன்றம் அல்லது மாகாண சபைகளுக்குள் நுழைய முடியும். எனவே விகிதாசார பிரதிநிதித்துவ முறையானது தேர்தலில் தொடர வேண்டும் மற்றும் அந்த முறையை இலங்கை அரசாங்கம் தனது தேர்தல் முறையில் ஏற்றுக்கொள்ளுமாறு கோரப்பட வேண்டும்.

7) "ஒரு நாடு ஒரே சட்டம்" பற்றிய ஜனாதிபதி ஆணைக் குழு, மத்திய அரசாங்கத்தைத் தவிர நாட்டிற்குள் வேறு எந்த சட்டமியற்றும் அமைப்புகளையும் இல்லாதொழிக்கவும் அல்லது தடுக்கவும் மற்றும் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வைத் தடுக்கவும் நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் தமிழர்களும், முஸ்லிம்களும் தங்களின் சம்பிரதாய சட்டங்களை கடைப்பிடிப்பதையும், அவர்களின் கலாசாரம், பழக்கவழக்கங்கள் மற்றும் நடைமுறைகளைப் பாதுகாப்பதையும் இது தடுக்கும்.

எனவே, ஆணைக்குழு அகற்றப்பட வேண்டும் மற்றும் இலங்கையிலுள்ள அனைத்து தேசிய இனங்களின் தனித்துவமான அடையாளமும், உரிமைகளும் இலங்கை அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற விடயங்கள் இந்திய பிரதமருக்கான ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இந்த ஆவணத்தில் வடக்கு கிழக்கு மாகாண இணைப்பை வலியுறுத்திய 1993 இல், ஜனாதிபதி ஆர்.பிரேமதாவின் காலத்தில் அமைக்கப்பட்ட மங்கள முனசிங்க தெரிவுக்குழுவின் யோசனைகள்.

1) ஒற்றையாட்சி அமைப்பைக் கைவிட்ட ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் கீழ் 1995 மற்றும் 1997 இல் அரசியலமைப்பு சீர்திருத்தங்களுக்கான அரசாங்க முன்மொழிவுகள்.

2) சமஷ்டி கட்டமைப்பின் அடிப்படையில் தமிழ் பேசும் மக்களின் வரலாற்று வாழ்விடங்களில் உள்ளக சுயநிர்ணயக் கோட்பாட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட தீர்வை ஆராய்வதற்கு கட்சிகள் ஒப்புக் கொண்ட 2002 டிசெம்பரில், ஒஸ்லோவில் இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடமபெற்ற பேச்சுவார்த்தை.

3) 2006இல், ஜனாதிபதி மஹிந்த க்ஷஉருவாக்க நிபுணர்கள் குழு நியமிக்கப்பட்டமை போன்ற முயற்சிகளும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இந்த ஆவணத்தில்

1.ஆர். சம்பந்தன், பாராளுமன்ற உறுப்பினர் -தலைவர் -தமிழ் தேசிய கூட்டமைப்பு

2. மாவை சேனாதிராஜா-தலைவர் இலங்கை தமிழ் அரசு கட்சி

3. நீதிபதி சி.வி.விக்னேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர் -தலைவர் -தமிழ் மக்கள் கூட்டணி (தி.மு.க.)

4. ஏ.அடைக்கலநாதன் -பாராளுமன்ற உறுப்பினர்-தலைவர் தமிழீழ விடுதலை அமைப்பு (ரெலோ)

5. தர்மலிங்கம் சித்தாத்தன் -பாராளுமன்ற உறுப்பினர்-தலைவர் -ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி

6. கே.பிரேமசந்திரன் -தலைவர் -ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

7. என்.ஸ்ரீகாந்தா -தலைவர் தமிழ் தேசியக் கட்சி ஆகியோர் கையெழுத்திட உடன்பட்டுள்ளனர். (அ)

# நாளாந்தம் 35 ஆயிரம் பேர் மருத்துவமனைகளில் சேர்வு

## விபத்துகளால் 35 பேர் தினமும் பலி

கொழும்பு, ஜன. 10


நாளாந்தம் சுமார் 35 ஆயிரம் பேர் வைத்தியசாலைகளில் சேர்க்கப்படுவதுடன், 35 பேர் விபத்துக்களால் மரணமடைகின்றனர் என்று சுகாதார அமைச்சின் ஆலோசகரும் சமூக மருத்துவ - தொற்றாத நோய் பிரிவின் மருத்துவர் சமிதா சிறிதுங்க தெரிவித்தார்.

மேலும், ஆண்டுதோறும், நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளில் ஆறு முதல் 70 இலட்சம் பேர் சிகிச்சைக்காக சேர்கின்றனர். இதில் 13 இலட்சம் பேர் விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் என்றும் குறிப்பிட்டார்.

2025ஆம் ஆண்டில் மொத்தமாக வைத்தியசாலைகளில் சேர்க்கப்படுபவர்களின் எண்ணிக்கை ஒரு கோடியே 50 இலட்சமாக அதிகரிக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஐந்தில் ஒருவர் விபத்துக்களால் காயமடைய வாய்ப்புள்ளது என்றும் அவர் சுட்டிக்காட் டினார். (ஐ)

# மனித குலம் காக்க ஓர் அருமருந்து!

ஆதி வள்ளியப்பன்



‘நவீன கால டார்வின்’, ‘டார்வினின் வாரிசு’ என்றெல்லாம் புகழப்படும் இ.ஓ.வில்சன் (எட்வர்ட் ஆஸ்போர்ன் வில்சன்) ஒரு பரிணாமவியலர், உயிரி-புவியியலர், சமூக உயிரியலர், எறும்பியலாளர் (myrmecologist). கடந்த நூற்றாண்டின் சிறந்த அறிவியல் எழுத்தாளர்களில் ஒருவரும்கூட. அமெரிக்காவின் மாசசூசிட்ஸ் மாகாணத்தில் *2021* கிறிஸ்துமஸுக்கு அடுத்த நாள் *92* வயதில் காலமான அவர், உயிரியலின் வழியாக உலகைப் புரிந்துகொள்ள முயன்றவர்.

அறிவியல் ஆராய்ச்சிகளின் மூலம் தான் பெற்ற வெளிச்சத்தை வாழ்நாள் முழுவதும் உலகுக்குக் கடத்திக்கொண்டிருந்த அவர், உலகம் இன்றைக்கு எதிர்கொண்டுள்ள அனைத்துப் பிரச்னைகளுக்கும் தீர்வாக ‘பூவுலகில் பாதி’யை (Half-Earth) இயற்கைக்கு அர்ப்பணித்தல் என்கிற கருத்தாக்கத்தை முன்வைத்தார். அந்தக் கருத்தாக்கத்தைத் தெளிவுபடுத்தி அவர் வலியுறுத்திய விதத்துக்குப் பின்னால், நீண்டதொரு ஆராய்ச்சிப் பயணம் இருக்கிறது.

**சிற்றுயிர் உலகம்**

‘ஒவ்வொரு குழந்தைக்கும் பூச்சிகளைப் பின்தொடர்ந்த பால்ய காலம் ஒன்றிருக்கும். அந்தப் பால்ய கால ஆர்வத்தைத் தாண்டி நான் வெளியே வரவில்லை. சூழலியலை ஆராய்ந்து பார்ப்பதிலும் குழந்தைகளுக்குப் பெருவிருப்பம் இருக்கும். பூச்சியியலை நான் தேர்ந்தெடுத்ததற்கு இப்படிக் குழந்தை மனத்துடன் இருந்தது ஒரு காரணம் என்றால், மற்றொரு காரணம், என்னால் ஒரு கண்ணால் மட்டுமே பார்க்க முடியும் என்பது. அதனால்தான் சிறிய விஷயங்களை உற்றுநோக்குவதில் கவனம் செலுத்தினேன்’ என்று சுயசரிதையில் வில்சன் குறிப்பிட்டுள்ளார். அவருடைய ஏழு வயதில் தூண்டிலிட்டு மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது, வலுவாக இரையைக் கடித்த ஒரு முள்மீனை நீரிலிருந்து வேகமாகப் பிடித்து இழுத்தபோது, மீனின் துடுப்பிலிருந்த கூர்மையான முள் அவருடைய வலது கண்பாவையை வெட்டிவிட்டது. அதனால் வாழ்நாள் முழுக்க ஒரு கண்ணால் மட்டுமே தெளிவாகப் பார்க்கக்கூடிய நிலை அவருக்கு உண்டானது.

பால்ய காலத்தில் அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டன் பகுதியில் உள்ள ராக் கிரீக் பூங்கா பகுதிக்கு வில்சன் அடிக்கடி சென்று திரும்பினார். ‘ஒரு நாள் மக்கிக்கொண்டிருந்த ஒரு மரக் கிளையை வெளியே எடுத்தேன். அதன் அடியில் சிட்ரோனெல்லா எறும்புகள் இருந்தன. அந்தக் கூட்டத்திலிருந்த உழைப்பாளி எறும்புகள் சிறிதாக, பருத்து, மஞ்சள் நிறத்தில் புத்திசாலிகளாகச் செயல்பட்டுக்கொண்டிருந்தன. அந்த எறும்புகளிலிருந்து எலுமிச்சைவாசம் வந்தது. அன்று எறும்புகள் குறித்து மனத்தில் பதிந்த அந்த பிம்பம் என் வாழ்நாள் முழுக்கத் திரும்பத் திரும்ப ஒரு நீங்காத காட்சியாக மனத்தில் பளிச்சிட்டுக்கொண்டே இருந்தது’ என்கிறார்.

பதின்ம வயதின் இறுதியில் பூச்சியியலாளர் ஆகும் ஆர்வத்துடன் ஈக்களைச் சேகரிக்கத் தொடங்கினார். அப்போது இரண்டாம் உலகப் போர் நடந்துகொண்டிருந்ததன் காரணமாகப் பூச்சி மாதிரிகளைக் குத்திவைக்கும் குண்டூசிகள் கிடைப்பது சிக்கலாக இருந்தது. இதன் காரணமாகச் சிறு குப்பிகளில் சேகரித்து ஆராயக்கூடிய எறும்புகளின் மீது அவருடைய கவனம் திரும்பியது.

**உயிரினச் சமநிலை**

புகழ்பெற்ற ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் *1956*இல் பயிற்றுவிக்கும் பணியில் சேர்ந்தார். எறும்பு வகைப்பாட்டியலராகவும் அவற்றின் பரிணாமவியல் வளர்ச்சி குறித்தும் ஆராயத் தொடங்கினார். சக எறும்புகளுடன் தொடர்புகொள்வதற்காக பெரமோன் எனும் வேதிப்பொருளை எறும்புகள் பயன்படுத்துகின்றன என்பதை முதலில் கண்டறிந்தவர் அவர்தான். *1960*-களில் பிரபலக் கணிதவியலரும் சூழலியலருமான ராபர்ட் மெக்ஆர்தருடன் இணைந்து வில்சன் பணியாற்றினார். புளோரிடா கீஸ் என்கிற சிறு தீவில் ‘உயிரின வகைகள் சமநிலைக் கோட்பாடு’ குறித்து அவர்கள் ஆராயத் தொடங்கினார்கள்.

இதற்காக அங்கிருந்த அலையாத்தித் தீவுகளில் பரிசோதனை மேற்கொண்டார்கள். முதலில் அந்தத் தீவுகளில் இருந்த பூச்சி வகைகளைக் கணக்கெடுத்தார்கள். பிறகு, அங்கிருந்த சிற்றுயிர்கள் அனைத்தையும் புகையூட்டி அழித்தார்கள். பிறகு புதிய உயிரின வகைகள் அந்தத் தீவுக்கு எப்படி வந்து, பெருகத் தொடங்குகின்றன என்பதை ஆராய்வதற்காக அவர்கள் காத்திருந்தார்கள். ஒரே ஆண்டில் அந்தச் சிறு தீவுகளில் இருந்த பல்லுயிர் வகைகள் ஒரு யுகத்துக்கு முந்தைய நிலைக்குத் திரும்பின. பிறகு, உயிரினப் பன்மை சமநிலையை எட்டி, அந்த இடத்தில் அவை நிலைத்திருக்கத் தொடங்கின.

இந்த நேரடிக் கள ஆய்வு முடிவுகள் அடிப்படையில், உயிரின வகைகள்-அவை வாழும் நிலப்பரப்பு இடையிலான சமன்பாடு எனும் கோட்பாடு முன்வைக்கப்பட்டது. இந்த ஆய்வு முடிவின்படி, ஒரு தீவில் வாழும் உயிரின வகைகளில் சமநிலை நிலவுகிறது என்பதுடன், அந்தத் தீவு சுருங்கினால், சில உயிரின வகைகளுக்கு இடமில்லாமல் போகும் என்பதும் உண்மையானது. அதாவது, ஓர் அளவுக்கு மேல் தீவுகளால் கூடுதல் உயிரின வகைகளைத் தாங்க முடிவதில்லை, அப்படித் தாக்குப்பிடிக்க முடியாத உயிரினங்கள் அழிந்துபோகின்றன. இந்த ஆய்வு அடிப்படையிலான ‘தீவு உயிரி-புவியியல் குறித்த கோட்பாடு’ என்கிற புத்தகம், சூழலியலர்களுக்கு நிரந்தரப் பாடமாக மாறியது.

சமூக நடத்தைகள் மரபணுக்களால் தீர்மானிக்கப்படுகின்றன என்கிற கருதுகோள் அடிப்படையில், *1975*இல் அவர் எழுதிய ‘Sociobiology: The New Synthesis’ (சமூக உயிரியல்) என்கிற நூல் பெரும் சர்ச்சைக்குள்ளானது. சுயநல மற்றுப் பிறருக்கு உதவும் குணம் மரபணு வழியாகவும் இயற்கைத் தேர்வு மூலமாகவும் வந்திருக்கலாம் என்று விலங்கு சமூகங்களை முன்வைத்து வில்சன் கூறினார். குறிப்பாக, அந்த நூலின் கடைசி அத்தியாயத்தில் மனித சமூகத்தில் அதிகாரப் படிநிலை நிலவுவதற்கு மரபணுரீதியிலான காரணங்கள் இருக்கலாம் என்கிற கருதுகோளை அவர் முன்வைத்திருந்தார். மனித சமூக நடத்தைகளுக்கும் மரபணுக்கள் காரணமாக இருக்கலாம் என்று அவர் கூறியதே சர்ச்சைக்குள்ளானது.

சமூக உயிரியல் அடிப்படையில் அவர் எழுதிய ‘On Human Nature’ (*1978*) புலிட்சர் பரிசைப் பெற்றது. பிறகு, பெர்ட் ஹால்டாப்ளருடன் இணைந்து அவர் எழுதிய ‘The Ants’ (*1990*) நூலும் புலிட்சர் பரிசைப் பெற்றது. சர்ச்சைக்குரிய சமூக-உயிரியல் கருதுகோளுக்கு மாறாக, உயிரி-புவியியல் சார்ந்த வில்சனின் பங்களிப்பே பரவலான கவனத்தைப் பெற்றது, குறிப்பிடத்தக்க ஒன்றாகவும் மாறியது.

**பெரும் கொடை**

புத்தாயிரத்துக்குப் பிந்தைய ஆண்டுகளில் மட்டும் *14* புத்தகங்களை அவர் எழுதியிருக்கிறார். ‘பூவுலகில் பாதி’யை இயற்கைக்கு அர்ப்பணித்தல் என்கிற கருத்தாக்கத்தை முன்வைத்து ‘Half-Earth: Our Planet’s Fight for Life’ (*2016*) என்கிற நூலை எழுதியபோது அவருடைய வயது *87*. பருவநிலை மாற்றத்தைத் தீவிரமடைய வைக்கும் உயிரினங்கள் திரளாக அற்றுப்போதலையும், சூழலியல் உருக்குலைவையும் தடுத்து நிறுத்த முடியும் என்று வில்சன் நம்பினார். அவரது கடைசி ஆசை, நிறைவேறாக் கனவு என்று இந்தக் கருத்தாக்கத்தை கூறலாம் என்கிறார் அமெரிக்க சூழலியல் எழுத்தாளர் ஜெரிமி ஹான்ஸ்.

மக்களின் நன்மைக்காகவும் இயற்கையின் நன்மைக்காகவும் பூவுலகில் பாதியை இயற்கைக்கு அர்ப்பணித்துப் பாதுகாக்க வேண்டும். அந்தப் பகுதியில் மனிதர்களைத் தவிர்த்த மற்ற உயிரினங் கள் செழித்து வாழ்வதற்கு இடமளிக்க வேண்டும். இதன் மூலம் இயற்கை தனக் குத் தானே புத்துயிர் ஊட்டிக்கொள் ளும். தன் வாழ்நாளின் பெரும் பகுதி யைப் பரிணாமவியல் ஆராய்ச்சிக்காகச் செலவிட்ட ஒருவர், பூவுலகுக்கும் மனித குலத்துக்கும் அளித்த மிகப் பெரிய கொடை இந்தக் கருத்தாக்கம் என்று ஜெரிமி குறிப்பிடுகிறார்.

பூவுலகில் பாதியை இயற்கைக்கு அர்ப்பணித்தால் *80%* உயிரினங்களைக் காப்பாற்ற முடியும். குறிப்பாக, உயிரி னப் பன்மை மிகுந்த கடல் பவளத் திட்டு கள், வெப்பமண்டல மழைக்காடுகள் உள்ளிட்டவற்றைக் காப்பது அவசியம். இது சாத்தியமானால் உயிரினங்கள் திரளாக அற்றுப்போதலையும் ஒட்டு மொத்த சூழலியல் சீர்குலைவையும் தவிர்க்க முடியும். மனித நாகரிகமும் பேரழிவிலிருந்து தப்பும்.

**சாத்தியமற்றதா?**


மனிதத் தூண்டுதலால் உலகில் பேரழிவு (Anthropocene) நடைபெற்று வரும் காலம் என்று நாம் வாழும் காலம் அடையாளப்படுத்தப்படுகிறது. இந்தப் பின்னணியில் பூவுலகில் பாதியை இயற்கைக்கு அர்ப்பணிப்பது என்பது நடைமுறை சாத்தியமற்ற அறிவியல் புனைவைப் போல் தோற்றமளிக்கலாம். இன்றைய தேதிக்குப் பூவுலகின் நிலப்பரப்பில் *17%* காடுகளும் *7%* பெருங்கடல்களும் ஏதோ ஒரு வகையில் பாதுகாப்பைப் பெற்றுள்ளன. அப்படியென்றால், பூவுலகில் பாதியைக் காப்பதற்கான இடைவெளி பெரிது. அதேநேரம் இது சாத்தியமற்றதல்ல. உலக சராசரி வெப்பநிலை மேலும் *1.5* டிகிரி செல்சியஸ் அதிகரிக்காமல் தடுத்து நிறுத்த, ‘*30*-க்கு *30*’ என்கிற திட்டத்தை மார்ஷல் தீவுகள் *2016*-ல் முன்மொழிந்தன. அதன்படி பூவுலகின் *30*மூ நிலப் பகுதியையும் *30%* கடல் பகுதியையும் பாதுகாக்க *50* நாடுகள் முன்வந்துள்ளன.

இப்படிச் செய்வதன்மூலம் புவியை வெப்பப்படுத்திவரும் கரியமிலவாயு கூடுதலாகக் கிரகிக்கப்படும், தூய தண்ணீர் கிடைக்கும், மண் வளம் பெறும், உயிரினங்கள் செழிக்கும், இன்னும் என்னென்ன வகைகளிலெல்லாம் இயற்கை மீள வழியுண்டோ அத்தனை வழிகளிலும் இயற்கை மீண்டெழும். அதன் பலனாக மனித குலம் உட்பட அனைத்து உயிரிகளும் காக்கப்படும், உயிரைக் கையில் பிடித்துக்கொண்டிருக்கும் பூவுலகு இழந்த ஆரோக்கியத்தைத் திரும்பப்பெறும். பூவுலகுக்குப் புத்துயிர் ஊட்டுவதற்கு இ.ஓ.வில்சன் முன்வைத்த இந்த அருமருந்து, உத்தரவாதமாகப் பலன் கொடுக்கும். ஆனால், அந்தத் தீர்வைச் செயல்படுத்துவது யாரோ சிலருடைய கைகளில் இல்லை. நம் ஒவ்வொருவர் கைகளிலுமே உள்ளது என்பதைத் தன் பணி, எழுத்து வழியாக உணர்த்தி வில்சன் நம்மிடமிருந்து விடைபெற்றிருக்கிறார்.

# சீன வெளிவிவகார அமைச்சரின் திடீர் விஜயத்தின் பின்னணி என்ன?

**இலங்கை அரசாங்கம், சீனாவுடனான உறவிலிருந்து சற்று விலகி, இந்தியாவுடன் நெருங்கிய உறவை பேணும் வகையிலான கருத்துக்கள் வெளிவர ஆரம்பித்துள்ள இந்த தருணத்தில், சீன வெளிவிவகார அமைச்சரின் விஜயம் அமைந்துள்ளது.**

ரஞ்சன் அருண் பிரசாத்



இலங்கைக்கும், சீனாவிற்கும் இடையில் கடந்த சில மாதங்களாக சில உரசல்கள் தொடர்ந்த பின்னணியிலேயே, சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி, இலங்கைக்கு நேற்று முன்தினம் அதிகாரபூர்வ விஜய மொன்றை மேற்கொண்டுள்ளார்.

இரண்டு நாட்கள் அதிகாரபூர்வ விஜயமாகவே, சீன வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளாரென கொழும்பி லுள்ள சீன தூதரகம் தெரிவிக்கின்றது.

**சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையில் என்ன பிரச்சினை?**

இலங்கைக்கு உரம் ஏற்றிய கப்ப லொன்று கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் நாட்டை வந்தடைந்த நிலையில், குறித்த உரத்தில் தீங்கு விளைவிக்கும் பக்றீரியாக்கள் அடங்கியுள்ளதாக தெரிவித்து இலங்கை விவசாய ஆய்வாளர்கள் அந்த உரத்தை நிராகரித்திருந்தனர்.

சுமார் 20,000 மெற்றிக் தொன் உரத்தையே, இலங்கை இவ்வாறு நிராகரித்திருந்தது.

சீனாவினால் கொண்டு வரப்பட்ட உரம் தரமற்றது என தெரிவிக்கப்பட்ட நிலையில், குறித்த உரத்தை கொண்டு வந்த கப்பல் இலங்கை கடற்பரப்பிற்குள் சுமார் 70 நாட்கள் நங்கூரமிட்டிருந்தது.

இவ்வாறான நிலையில், தமது உரம் தரத்தில் சிறந்தது எனவும், இந்த உரத்தை மூன்றாவது தரப்பாக உலகில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆய்வு கூடமான சுவிஸ் எஸ்.ஜி.எஸ் நிறுவனத்திடம் அனுப்பி பரிசோதனை செய்ய வேண்டும் என சீன தூதரகம் இலங்கையை வலியுறுத்தியது.

இந்த ஆய்வு கூடத்தினால் வெளி யிடப்படும் பெறுபேற்றை இரு நாடு களும் நிபந்தனைகள் இன்றி ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் கடந்த ஆக்டோபர் மாதம் சீனா அறிக்கை யொன்றின் ஊடாக தெரிவித்திருந்தது.

உரத்தில் தீங்கும் விளைவிக்கும் பதார்த்தம் இருக்குமாயின், அதனை தாம் நிபந்தனையின்றி மீள நாட்டிற்கு கொண்டு செல்வதாகவும், தீங்கு விளை விக்கும் பதார்த்தம் இல்லையாயினும், பணம் செலுத்தி உரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் சீனா கூறியது.

எனினும், சீனாவின் இந்த கோரிக் கைக்கு எந்தவித இணக்கப்பாடும் இன்றி, உரத்தை ஏற்றிய கப்பல், இலங்கை கடற்பரப்பை விட்டு வெளியேறியது.

இவ்வாறான பிரச்னை தொடர்ந்த நிலையில், இலங்கையின் அரச வங்கி யான மக்கள் வங்கியை, சீனா கறுப்பு பட்டியலுக்குள் உள்வாங்கியது.

நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட உத்தரவிற்கு அமையவே, தாம் பணம் செலுத்தவில்லை என மக்கள் வங்கி தெரி வித்த போதிலும், சீனா, மக்கள் வங்கியை கறுப்புப் பட்டியலுக்குள் உள்வாங்கியது.

இதையடுத்து, இரு நாடுகளுக்கும் இடையில் முறுகல் நிலை மேலும் வலுப் பெற ஆரம்பித்திருந்தது.

இவ்வாறான நிலையில், சீன நிறுவ னத்திடமிருந்து உரத்தை கொள்வனவு செய்த உள்நாட்டு முகவர் நிறுவனத் திற்கு பணம் செலுத்துவதை தவிர்க்கும் வகையில், கொழும்பு வணிக மேல் நீதி மன்றத்தினால் விதிக்கப்பட்ட தடை உத்தரவு கடந்த 3ஆம் திகதி தளர்த் தப்பட்டது.

இரண்டு தரப்பினரும் சமரசம் ஏற் படுத்திக் கொண்டுள்ளதாக நீதிமன் றத்திற்கு மனுவின் ஊடாக அறிவிக்கப் பட்ட நிலையிலேயே நீதிவான் இந்த உத்தரவை பிறப்பித்திருந்தார்.

நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட உத்தரவை அடுத்து, நேற்று முன்தினம் தரமற்ற உரத்தை அனுப்பியதாக கூறப் படும் சீன நிறுவனத்திற்கு, மக்கள் வங்கி 6.9 மில்லியன் அமெரிக்க டொலரை செலுத்தியது.

**சீன தூதுவரின் வடக்கு விஜயம்**

இலங்கைக்கான சீன தூதுவர், வடக்கு மாகா ணத்தின் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் ஆகிய பகுதியை இலக்காக கொண்ட விஜய மொன்றை கடந்த மாதம் 15ம் தேதி முதல் மூன்று தினங்களுக்கு மேற் கொண்டிருந்தார்.

இந்த விஜயத்தின் போது, இந்தியாவை அண்மித்துள்ள யாழ்ப் பாணம் மற்றும் மன்னார் ஆகிய பகுதிகளிலுள்ள மீனவர்களுக்கு 2 கோடி ரூபாய் பெறுமதியான உணவுப் பொருட்கள் மற்றும் கடற்றொழில் சார் உபகரணங்களை சீன தூதுவர் வழங்கி வைத் திருந்தார்.

அதேபோன்று, பாக்கு நீரிணையிலுள்ள மணல் திட்டுக் களையும் சீன தூதுவர் படகில் சென்று பார்வையிட்டிருந்ததை அனைவராலும் பேசப்பட்ட ஒன்றாக காணப்பட்டது.

வடக்கில் சீனாவினால் கைவிடப்பட்ட திட்டம், இந்தியாவிற்கு வழங்கப்படவுள்ளதாக வெளியான தகவல்களின் பின்னரே, சீன தூதுவர் வட மாகாணத்திற்கான விஜயத்தை மேற்கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

**சீன தூதுவரின் அடுத்த நகர்வு**

வட மாகாணத்திற்கு மூன்று நாள் விஜயம் மேற்கொண்ட சீன தூதுவர், டிசெம்பர் மாதம் 17ஆம் திகதி தனது வடக்கு விஜயத்தை நிறைவு செய்தார்.

அதனைத் தொடர்ந்து, கொழும்பிற்கு வருகைத் தந்த சீன தூதுவர், அடுத்த கட்ட நகர்வாக, இலங்கையின் பிரதான எதிர்கட்சியாக செயற்படும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாஸவை சந்தித்திருந்தார்.

எதிர்கட்சித் தலைவரை சந்தித்த சீன தூதுவர், சுமார் 20 மில்லியன் ரூபாய் பெறுமதியான உயிர்காக்கும் சிறுநீரக டயாலிசிஸ் இயந்திரத்தை நன்கொடை யாக வழங்கினார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்க ளிலுள்ள வைத்தியசாலைகளுக்கு, எதிர்கட்சித் தலைவரின் ஊடாக தேவை நிமிர்த்தம் வழங்கும் நோக்கிலேயே இந்த உதவி திட்டம் வழங்கப்பட்டது.

அதன்பின்னர், தென் மாகாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட சீன தூதுவர், அங்கும் பல்வேறு உதவித் திட்டங்களை வழங்கி வைத்தார்.

இந்த காலப் பகுதியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட மேலும் சில அரசியல்வாதிகளையும் சீன தூதுவர் சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தியிருந்தார்.

**சீனாவின் அதிரடி நடவடிக்கைகள்**

கடந்த சில மாதங்களில் மாத்திரம் சீனா, இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் தென் மாகாணங்களில் பல மில்லியன் கணக்கான ரூபாய் செலவில் பல்வேறு திட்டங்கள் மற்றும் பல்வேறு உதவிகளை வழங்கி வருவதை காண முடிகின்றது.

உரம் பிரச்னை மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள மூன்று தீவுகளில் முன்னெடுக்கப்படவிருந்த திட்டங்கள் கைநழுவிய பின்னணியிலேயே, சீனா இவ்வாறான பாரிய உதவிகளை வழங்கி வருவதை அவதானிக்க முடிகின்றது.

**சீன வெளிவிவகார அமைச்சரின் விஜயம்**

இலங்கைக்கும், சீனாவிற்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்படக் கூடிய வகையிலான சில சம்பவங்கள் அண்மை காலத்தில் இடம்பெற்ற பின்ன ணியிலேயே, சீன வெளிவிவகார அமைச் சர் இலங்கைக்கான அதிகாரபூர்வ விஜ யத்தில் ஈடுபட்டுள்ளார்.

இலங்கை நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, எதிர்வரும் 10 மற்றும் 11ஆம் திகதிகளில் இந்தியாவிற்கு அதிகாரபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ள திட்ட மிட்ட நிலையில், அதற்கு முன்னைய நாள் சீன வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்கின்ற மையானது, பல்வேறு சந்தேகங்களை தோற்றுவித்துள்ளது.

அத்துடன், தெற்காசியாவில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலை எரிபொருள் தாங்கிகள், இந்தியாவிற்கு வழங்குவதற்கான உடன்படிக்கை கடந்த 6ம் தேதி கைச்சாத்திடப்பட்ட பின்னணி யிலேயே, சீன வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

இலங்கை அரசாங்கம், சீனாவுடனான உறவிலிருந்து சற்று விலகி, இந்தியாவு டன் நெருங்கிய உறவை பேணும் வகை யிலான கருத்துக்கள் வெளிவர ஆரம் பித்துள்ள இந்த தருணத்தில், சீன வெளி விவகார அமைச்சரின் விஜயம் அமைந் துள்ளது.

இந்த விஜயமானது, இலங்கையுட னான உறவை மேம்படுத்திக் கொள்ளும் நோக்கிலேயே அமைந்துள்ளதாக அரசி யல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.



# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

## மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

14. ஒரு பிள்ளை காலையில் எழுந்து பாடசாலை செல்வது தொடர்பான ஐந்து கருமங்களில் முதற்கருமமும், இறுதிக் கருமமும் தரப்பட்டுள்ளன. இரண்டாம், மூன்றாம், நான்காம் கருமங்களைச் சரியாகக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.

A - நித்திரை விட்டெழுதல்
B - ..........................................
C - ..........................................
D - ..........................................
E - வீட்டிலிருந்து பாடசாலை புறப்படல்

(1) B - உடையணிதல்
C - முகம் கழுவுதல்
D - உணவு உண்ணல்


(2) B - உணவு உண்ணல்
C - முகம் கழுவுதல்
D - உடையணிதல்

(3) B - முகம் கழுவுதல்
C - உடையணிதல்
D - உணவு உண்ணல்

15. பின்வரும் கவிதையின் நான்கு வரிகள் ஒழுங்கின்றி எழுதப்பட்டுள்ளன. அவற்றைச் சரியாக ஒழுங்குபடுத்தினால் கிடைக்கும் விடை யாது?

A - நெற்பயிர் நன்றாய்ச் செழித்து வளர்ந்தது
B - வயலை உழுது நாற்றுகள் நட்டனர்
C - நற்கதிர் ஈன்று முற்றி விளைந்தது
D - பசளை இட்டு நீரும் பாய்ச்சினர்.

(1) BACD (2) DBAC (3) BDAC


16. 

இந்த உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?


(1) 7
(2) 8
(3) 9

17. வெற்றிடங்கள் இரண்டிலும் இடம்பெற வேண்டிய உருக்கள் அடங்கிய விடையைத் தெரிவு செய்க.

A ⟶ ∀ எனின், E ⟶ ..............
T ⟶ ⊥ எனின், H ⟶ ..............




18. முதலில் தரப்பட்ட உருவினை அமைப்பதற்குரிய உருத் துண்டுகள் அடங்கிய விடையைத் தெரிவு செய்க.




(1) (2) (3)

19. முதலில் தரப்பட்ட கட்டத்தினுள் உள்ள மூன்று உருத்துண்டுகளையும் ஒன்றுபடச் சேர்த்து அமைக்கக் கூடிய தனி உருவைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

20. முதலில் தரப்பட்ட உருவினைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

### விடைகள்

*14) 3 15) 3 16) 2 17) 3 18) 1 19) 2 20) 1*

---

## கல்வி tv CHANNEL-1

**10.01.2022 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

## கல்வி tv CHANNEL - 2

**10.01.2022 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# இன, மதவாதத்தை விதைத்ததன் சாபத்தையே அரசு அனுபவிக்கிறது

## எதிர்க்கட்சி தலைவர் சஜித்

மன்னார், ஜன. 10

**இனவாதம், இன பேதம், மதவாதத்தை விதைத்தன் சாபத்தையே அரசாங்கம் இன்று அனுபவிக்கின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கூறியுள்ளார்.**

அத்துடன், தேர்தலுக்கு முன்னர் நாட்டு மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்திய அரசாங்கம் தற்போது அதன் மூலமே அழிந்து வருவகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

மன்னார் எருக்கலம்பிட்டி முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலயத்திற்கு நேற்று முன்தினம் கணனி உபகரணங்களை கையளித்த பின்னர் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"தேர்தலுக்கு முன்னர் நாட்டு மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்திய அரசாங்கம் தற்போது அதன் மூலம் அழிந்து வருவகின்றது. இனவாதம், இன பேதம், மதவாதத்தை விதைத்தன் சாபத்தையே அரசாங்கம் இன்று அனுபவிக்கின்றது.

ஊட்டச்சத்து குறைபாடும் போசாக்கின்மையும் தலைவிரித்தாடும் நாட்டில் உள்ள குழந்தைகளின் இணைய வழி கல்விக்கு தீர்வை வழங்க முடியாத அரசாங்கத்தால் ஊட்டச்சத்து குறைபாட்டிற்கு எவ்வாறு தீர்வை வழங்க முடியும். முன்னெப்போதையும் விட இந்நாட்களில் தேசிய ஊட்டச்சத்து கொள்கையின் தேவை மிகவும் உணரப்பட்டு வருகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் குறித்த கொள்கையின் தேவை நிறைவேற்றப்படும்." - என்றார். (ஐ)



# பேதைப் பொருட்களுடன் மூன்று பேர் கைதாகினர்

கொழும்பு, ஜன.10

மொனராகலை, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் ஹெரோயின், கஞ்சா போதைப் பொருட்களுடன் நேற்று முன்தினம் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.



மொனராகலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கும்புக்கணை பிரதேசத்தில், மோட்டார் சைக்கிளில் கடத்தப்பட்ட 10 கிலோ கஞ்சாவை பொலிஸார் கைப்பற்றியதுடன் ஒருவரை கைது செய்தனர். ஒக்கம்பிட்டியை சேர்ந்த 33 வயது நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, கொழும்பு பொரளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 5 கிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அந்த இடத்தை சேர்ந்த 34 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேலும், கொழும்பு - கல்கிசை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 4 கிராம்300 மில்லிகிராம்ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வத்தளையைச் சேர்ந்த 41 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (கே)

# ரூ. 2 கோடி பெறுமதியான கஞ்சாவுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஜன. 10

இரண்டு கோடி ரூபாய் பெறுமதியான கேரள கஞ்சாவை வானில் ஏற்றிச் சென்ற நபர் ஒருவர் நேற்றுக் காலை பாணந்துறை - பொதுப்பிட்டியில் கைதுசெய்யப்பட்டாரென பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

பாணந்துறையில் இருந்து களுத்துறை நோக்கி பயணித்த வான், பொத்துப்பிட்டி சந்திக்கு அருகில் காலி வீதியில் நிறுத்தப்பட்ட போதேஇந்தக் கைது இடம்பெற்றது.

சந்தேகநபரிடம் இருந்து 63 கிலோ 200 கிராம் கேரளா கஞ்சாவை பொலிஸார் கைப்பற்றியதுடன் வானையும் பறிமுதல் செய்தனர். அத்துடன், அவரிடமிருந்து 7 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமான பணத்தையும் கைப்பற்றினர்.

இந்த கேரள கஞ்சா வெளிநாடுகளிலிருந்து போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும், பாணந்துறை சலிது என்பவருக்கு சொந்தமானது என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ஐ)

# நாவற்குழி விபத்து; ஒருவர் படுகாயம்!

ஏ-9 நெடுஞ்சாலையின் நாவற்குழி பாலத்துக்கு அண்மையாக காரும் லொறியும் மோதிய விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்த விபத்து நாவற்குழி சந்திக்கும் - பாலத்துக்கும் இடையில் இடம்பெற்றுள்ளது. இதில், காரில் பயணித்தவரே படுகாயங்களுக்கு உள்ளானார். லொறியை முந்திச் செல்ல முற்பட்டபோதே இந்த விபத்து இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது. விபத்தில் காயமடைந்தவர் யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள் ளார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடையவர் கைது!

கொழும்பு, ஜன. 10

பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரை நுகேகொடை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நுகேகொடை மேல்மாகாண தெற்கு குற்றத்தடுப்பு பிரிவின் அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின்போதே சந்தேக நபர் நேற்று முன்தினம்கைது செய்யப்பட்டார்.

கைதான சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது, கல்கிசை மற்றும் அங்குலானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 6 சொத்துக்கள் திருடப்பட்டமை தெரியவந்ததுடன், கடைகளில் திருடப்பட்ட ஆறு கைபேசிகள் மற்றும் மளிகைப் பொருட்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட பொருட்களும், சந்தேக நபரும் மேலதிக விசாரணைகளுக்காக கல்கிசை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 37 வயதுடைய இரத்மலானை பகுதியை சேர்ந்தவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மனைவி கோடரியால் தாக்கியதில் கணவன் பலி!

கொழும்பு, ஜன.10

குடிபோதையில் வந்து தாக்கிய கணவனை மனைவி பதிலுக்கு கோடரியால் தாக்கியதில் அவர் உயிரிழந்தார்.

இரத்தினபுரி - குருவிட்டை - கந்தலத்தை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், அதே இடத்தைச் சேர்ந்த 34 வயதுடைய நபரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் அறியவருவதாவது,

குறித்த நபர், மதுபோதையில் தனது மனைவியை தினமும் சித்திரவதைக்கு உள்ளாக்கியுள்ளார். இதனால், அவரும் குழந்தைகளும் அயல் வீட்டில் தஞ்சமடைவது வழக்கமாக இருந்துள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவும் குடிபோதையில் கூரிய ஆயுதம் மற்றும் ஒருவகை அமிலத்துடன் வீட்டுக்கு வந்த கணவன், மனைவியை தாக்கியுள்ளார். அப்போது, மனைவி கோடரியால் தாக்கியுள்ளார். சம்பவத்தில் படுகாயமடைந்த நபரை வைத்தியசாலையில் சேர்த்தபோதிலும் நபர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார். தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட கோடரியுடன் 31 வயதான பெண் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குருவிட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கே)

# இனி, ராஜபக்ஷக்களிடம் ஆட்சியை நாட்டு மக்கள் வழங்கமாட்டார்கள்

## குமார வெல்கம எம். பி. கூறுகிறார்

கொழும்பு, ஜன. 10

நாட்டின் மக்கள் இனியொரு போதும் ராஜபக்ஷக்களிடம் ஆட்சியதிகாரத்தை ஒப்படைக்கமாட்டார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் ஸ்தாபகர், முன்னாள் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கவின் 123 ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் காலி முகத்திடலில் அமைக்கப்பட்டுள்ள அவரின் உருவச்சிலைக்கு மலரஞ்சலி செலுத்தியதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நிர்வாகத்தின் விளைவை 2019ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் காலத்தில் நாட்டு மக்களுக்கு எடுத்துரைத்தேன். நான் குறிப்பிட்டதை மக்கள் ஏற்கவில்லை தற்போது அனுபவ ரீதியில் அதனை ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

அரசாங்கத்தின் தவறான நிர்வாகத்தினால் நாட்டு மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்க் கொண்டுள்ளார்கள். நாட்டு மக்கள் இனியொருபோதும் ராஜபக்ஷக்களுக்கு ஆட்சியதிகாரத்தை ஒப்படைக்கமாட்டார்கள். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷமீது நாட்டு மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையும் 2019ஆம் ஆண்டுக்கு பிறகு இல்லாதொழிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தொடர்பில் கருத்துரைப்பது பயனற்றதாகும். ஜனாதிபதியால் நாட்டையல்ல ஒரு பிரதேச சபையைக்கூட சிறந்த முறையில் நிர்வகிக்க முடியாது என்பதை நாட்டு மக்கள் தற்போது தெளிவாக உணர்ந்துக் கொண்டுள்ளார்கள்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை முழுமையாக இல்லாதொழிக்கப்பட வேண்டும் அல்லது ஜனாதிபதிக்கு மிதமிஞ்சிய வகையில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிறைவேற்று அதிகாரத்தை முறையற்ற வகையில் பயன்படுத்தவில்லை. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களை அரசியலமைப்பின் 19ஆவது திருத்தம் ஊடாக பாராளுமன்றுக்கு வழங்கினார். பின்னர் அவர் தலைமையிலான சுதந்திர கட்சியினர் அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் ஊடாக பாராளுமன்றின் அதிகாரத்தை மட்டுப்படுத்தி நிறைவேற்று அதிகாரத்தை மீண்டும் ஜனாதிபதிக்கு வழங்கினார்கள். நாடு தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமைக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொறுப்புக்கூற வேண்டும் - என்றார். (ஐ)



## சூறாவளி காற்றுடன் கொட்டித் தீர்த்த மழை வாஷிங்டனில் நீரில் மூழ்கின குடியிருப்புகள்!

*வொஷிங்டன், ஜன. 10*

அமெரிக்காவின் வாஷிங்டனில் சூறாவளிக் காற்றுடன் கொட்டித் தீர்த்த கனமழையால் குடியிருப்புகள் நீரில் மூழ்கியுள்ளன.

வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் சிக்கிக் கொண்டவர்களை படகுகள் மூலம் மீட்கும் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சுழன்று அடித்த காற்றில் வாகனங்கள் நிலைகுலைந்தன. வீதிகளில் தேங்கிய நீரில் கார்கள் மூழ்கின.

புயல் கரையை கடக்கும்போது சூறைக்காற்றுடன் கனமழை பெய்யக் கூடுமென அமெரிக்க வானிலை ஆராய்ச்சி மையம் எச்சரித்துள்ளது.

பல்வேறு பகுதிகளில் நிலச் சரிவு ஏற்பட்டுள்ளதாகவும், ஏறத்தாழ 50 ஆயிரம் பேர் மின்சாரமின்றி தவிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மீட்புப் படைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பிரான்ஸில் தொற்று வேகம் நீடித்தால் உணவு விநியோகம் பாதிக்கப்படுமா?

### ஆராய்வதற்காக இன்று கூட்டம்

*பரிஸ், ஜன. 10*

ஒமைக்ரோன் வைரஸ் தொற்று தற்போதைய கணக்கில் இலட்சங்களாகத் தொடர்ந்து நீடித்தால் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களது விநியோகங்கள் பாதிக்கப்படும் நிலை ஏற்படுமா?

இது தொடர்பாக ஆராய்கின்ற கூட்டம் இன்று திங்கட்கிழமை நிதி அமைச்சில் இடம்பெறவுள்ளது. விவசாயம், போக்குவரத்துத் துறை அமைச்சுக்களது அதிகாரிகள் அதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

நாட்டில் உணவு விநியோகங்களது தற்போதைய நிலைமை என்ன,பாதிப்புகள் ஏதும் உண்டா என்று விவசாய அமைச்சரிடம் செய்தி ஊடகங்கள் வினவியுள்ளன. "இல்லை. உடனடியாக எந்தப் பாதிப்பும் இருக்காது. ஆனாலும் நிலவரத்தை ஆராய்வதற்காக எதிர்வரும் திங்களன்று சம்பந்தப்பட்ட தரப்பினருடன் இது பற்றிக் கலந்துரையாடவுள்ளோம்" என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

தொற்றினாலும் தொடர்பினாலும் லட்சக் கணக்கான தொழிலாளர்கள் வீடுகளில் முடங்குவது சேவைகளையும் விநியோகங்களையும் ஸ்தம்பிக்கச் செய்துவிடக்கூடும் என்று சுகாதார அறிவியலாளர் குழு ஏற்கனவே எச்சரிக்கை செய்துள்ளது.

"முதலாவது ஊசி ஏற்றுவோர் எண்ணிக்கை அதிகரிக்கிறது. பிரான்ஸில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை வெளியான தரவுகளின் படி 24 மணி நேரத்தில் உறுதி செய்யப்பட்ட தொற்று எண்ணிக்கை இரண்டாவது நாளாக மூன்று லட்சத்தைத்(328,214) தாண்டியுள்ளது. 436 பேர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சுகாதாரப் பாஸைத் தடுப்பூசிப் பாஸாக மாற்றுவதை அனுமதிக்கின்ற சட்ட மூலம் இரவிரவாக நடந்த விவாதங்களுக்குப் பின்னர் பாராளுமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. தடுப்பூசிப் பாஸை எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் நடைமுறைக்குக் கொண்டுவர அரசு எதிர்பார்த்துள்ளது. 20 ஆயிரம் சிறுவர்கள் உட்பட 2லட்சத்து 30 ஆயிரம் பேர் கடந்த வாரம் தங்கள் முதலாவது தடுப்பூசியைப் பெற்றுள்ளனர். சுகாதார அமைச்சர் அதனை வரவேற்றுள்ளார். (அ)



# எதியோப்பிய அகதி முகாம்மீது அரச படைகள் விமான தாக்குதல்!

### 56 பேர் பலி! 30 பேர் காயம்!!



*அடிஸ் அபாபா, ஜன. 10*

எதியோப்பியாவின் டைக்ரே பகுதியில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த அகதி முகாம் மீது அந்நாட்டுப் படைகள் நடத்திய விமானத் தாக்குதலில் 56 பேர் கொல்லப்பட்டனர்.

அத்துடன், குழந்தைகள் உட்பட 30 பேர் காயமடைந்தனர் என உள்ளூர் அதிகாரிகள் மற்றும் நேரில் கண்ட சாட்சிகளின் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு சம்பவ இடத்தில் உள்ள மனிதாபிமானப் பணியாளர்கள் ரொய்ட்டர்ஸிடம் தெரிவித்தனர்.

இராணுவ செய்தித் தொடர்பாளர் கேணல் கெட்நெட் அடேன், அரசாங்க செய்தித் தொடர்பாளர் லெஜெஸ் துலு மற்றும் எத்தியோப்பியா பிரதமர் அபி அகமதுவின் செய்தித் தொடர்பாளர் பில்லின் செயோம் ஆகியோரைத் தொடர்பு கொண்டு இது குறித்துக் கருத்தறிய முயன்றபோதும் அவர்கள் உடனடியாக பதிலளிக்கவில்லை என ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவை தெரிவித்துள்ளது. எதியோப்பியாவின் டைக்ரே பகுதியில் கிளர்ச்சியாளர்களுக்கும் எதியோப்பிய படைகளுக்கு இடையே இடம்பெற்றுவரும் மோதல்களில் பொது மக்கள் குறிவைக்கப்பட வில்லை என அரசாங்கம் முன்னர் மறுத்து வந்தது.

இந்நிலையில் உள்நாட்டில் இடம்பெயர்ந்த அகதிகள் முகாமை இலக்கு வைத்து பிரதமர் அபி அகமது படைகள் நடத்திய மற்றொரு கொடூரமான தாக்குதலில் 56 உயிர்கள் பலியாகியுள்ளன என மத்திய அரசை எதிர்த்துப் போராடி வரும் திக்ரே மக்கள் விடுதலை முன்னணியின் செய்தித் தொடர்பாளர் கெடாச்யூ ரெடா ட்விட்டரில் தெரிவித்துள்ளார்.

எரித்திரியாவின் எல்லைக்கு அருகிலுள்ள பிராந்தியத்தின் வடமேற்கில் உள்ள டெடெபிட் நகரத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு விமானத் இரவு நடந்தது என அங்குள்ள மனிதாபிமான உதவிப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

முன்னதாக வெள்ளிக்கிழமை எதியோப்பிய அரசாங்கம் பல எதிர்க்கட்சித் தலைவர்களை சிறையில் இருந்து விடுவித்ததுடன், நல்லிணக்கத்தை வலுப்படுத்த தமது அரசியல் எதிரிகளுடன் பேச்சுவார்த்தைகளை தொடங்கவுள்ளதாகக் கூறியது. இவ்வாறான நிலையிலேயே அகதிகள் முகாமை இலக்குவைத்து கொடூர தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நள்ளிரவில் குண்டுகள் வீசப்பட்டதாக முகாமில் இருந்த மக்கள் தெரிவித்தனர். சம்பவ நேரம் கடும் இருட்டாக இருந்தது. இதனால் அவர்களால் தப்பிக்க முடியவில்லை என தாக்குதலில் காயமடைந்தவர்களை மேற்கோள் காட்டி மனிதாபிமான உதவி பணியாளர் ஒருவர் கூறினார். (அ)

## பாகிஸ்தானில் கடும் பனிப்பொழிவு 21 சுற்றுலாப் பயணிகள் உயிரிழப்பு!

*இஸ்லாமாபாத், ஜன. 10*

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தின் முர்ரி மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் ஏற்பட்டுள்ள கடும் பனிப்பொழிவு காரணமாக 21 பேர் உயிரிழந்தனர். முர்ரி மலைப்பிரதேசம், குளிர்காலங்களில் அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் வருகை தரும் சுற்றுலாத்தலமாக விளங்குகின்றது. இந்நிலையில், முர்ரி மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் ஏற்பட்டுள்ள கடும் பனிப்பொழிவு காரணமாக குறைந்தது 21 பேர் வரை உயிரிழந்திருக்கக்கூடும் என மீட்புப்பணிகளில் ஈடுபட்டுள்ள பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கடும் பனிப்பொழிவு காரணமாக கார்களுக்குள் பயணிகள் சிக்கிக்கொண்டதால், மூச்சுத் திணறல் ஏற்பட்டு இறந்தனரென கூறப்பட்டுள்ளது. (அ)



# நிலவின் இருண்ட பக்கத்தில் தெரிந்த 'குடில்' கிரக வாசிகளுடையது அல்ல!

### சீனாவின் விண்கலம் உறுதிசெய்தது


*பீஜிங், ஜன. 10*

நிலாவில் பூமிக்கு எப்போதும் தெரியாத இருண்ட பக்கத்தில் என்ன இருக்கிறது என்பதைச் சீனாவின் "யூட்டு -2" லூனர் விண்கலம் (Yutu-2 lunar rover) அங்கு இறங்கி ஆய்வு செய்துவருகிறது. சந்திரனில் தொலைவில் அதன் மர்மப்பக்கத்தில் நடத்தப்படுகின்ற முதலாவது பரிசோதனை முயற்சி அதுவாகும்.

கடந்த நவம்பரில் "யூட்டு - 2" விண்கலம் அனுப்பியிருந்த படம் ஒன்றில் நிலாவில் மிகத் தொலைவில் சிறிய கன சதுரக் கட்டி வடிவிலான ஆர்வத்துக்குரிய பொருள் ஒன்று காணப்பட்டது. அந்த மர்ம உருவம் என்னவாக இருக்கக் கூடும் என்று பல விதமான ஊகங்கள் விண் வெளி அறிவியல் வட்டாரங்களில் நிலவியது. அது ஒரு சிறிய குடில் போன்று தோன்றியதால் சீன அறிவியலாளர்கள் அதனை "சந்திரக் குடிசை" (Moon Hut) என்று அழைத்தனர். வேற்றுக் கிரக உயிரினங்கள் பற்றிய புனைகதைகளை நம்புவோர் அதனை "மர்மக்குடிசை" ('mysterious hut') என்றும் "வேற்றுக் கிரக வாசிகளது குடில்" ('Alien Hut') எனவும் கற்பனை செய்தனர்.

இது தொடர்பான பல செய்திகள் கடந்த நவம்பர் மாதம் முதல் விண்வெளி அறிவியல் துறைச் செய்தியாளர்களால் வெளியிடப்பட்டு வந்தன. மர்மத்தைக் கண்டு பிடிப்பதற்காக சீன விஞ்ஞானிகள் "யூட்டு"விண்கலத்தை அந்த இடத்துக்கு நெருக்கமாக அனுப்பி மேலும் தெளிவான படங்களைத் தற்சமயம் பெற்றுக் கொண்டுள்ளனர். உலக கவனத்தை ஈர்த்த அந்த மர்ம உருவம் ஒரு தனித்த கற்பாறை என்பது தெளிவாகத் தெரிய வந்துள்ளது. முயல் ஒன்றின் சாயலில் அது தென்படுவதால் சீன அறிவியலாளர்கள் அதற்கு 'jade rabbit'எனப் பெயரிட்டுள்ளனர்.

நிலாவில் ஆராய்ச்சிகளை மேற் கொள்கின்ற யூட்டு - 2 கலம் கடந்த 2019 இல் சீனாவின் தேசிய விண்வெளி நிர்வாகத்தி னால் (China National Space Administration)அங்கு தரையிறக்கப்பட்டிருந்தது. (அ)



# ஆஷஷ் 4ஆவது போட்டி சமநிலையில் நிறைவு!

சிட்னி, ஜன. 10

அவுஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகள் மோதிய ஆஷஷ் டெஸ்ட் தொடரின் நான்காவது போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

அவுஸ்திரேலியாவில் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடக்கிறது. முதல் மூன்று போட்டிகளை வென்று அவுஸ்திரேலிய அணி தொடரை வென்ற நிலையில், தொடரை முழுமையாக இழந்து விடாமல் தவிர்க்க இங்கிலாந்து முனைந்தது.

இந்த நிலையில் நான்காவது டெஸ்ட் போட்டி கடந்த ஐந்தாம் திகதி சிட்னியில் ஆரம்பமானது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா ஆரம்பத்தில் தடுமாறினாலும், உஸ்மான் கவாஜாவின் அபாரமான சதத்தின் உதவியால் 8 விக்கெட்களை இழந்து 416 ஓட்டங்களை குவித்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணிக்கு பெயர்ஸ்ரோ - பென்ஸ்ரோக்ஸ் கூட்டணி நம்பிக்கை அளிக்கவே தனது முதல் இனிங்ஸில் சகல விக்கெட்களையும் இழந்து 294 ஓட்டங்களைப் பெற்றது.

இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 6 விக்கெட் இழப்புக்கு 265 ஓட்டங்களைப் பெற்றது. இந்த இனிங்ஸிலும் ஆட்டமிழக்காமல் சதம் அடித்து அசத்தினார் கவாஜா. அவர் 138 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 10 பௌண்ட்ரிகளுடன் 101 ஓட்டங்க ளைக் குவித்திருந்தார்.



பதிலுக்கு தனது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணிக்கு தொடக்கம் கொடுத்த கிராவ்லி 77 ஓட்டங்களை எடுத்து நம்பிக்கை கொடுத்து. பின்னர் வந்தவர்கள் சொதப்பிய நிலையில், மீண்டும் பென்ஸ் ரோக்ஸ் - பெயர்ஸ்ரோ சிறப்பான இணைப் பாட்டத்தை ஏற்படுத் தினர்.

பென்ஸ்ரோக்ஸ் 60 ஓட்டங்களையும், பெயர்ஸ்ரோ 41 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்தனர். நேற்றைய நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தபோது, இங்கிலாந்து அணி 9 விக்கெட் களை இழந்து 270 ஓட்டங்களை எடுத்திருந்தது. இதனால், நான் காவது போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

அவுஸ்திரேலியாவின் பந்து வீச்சில் பொலண்ட் 3 விக்கெட்களையும், பட் கம்மின்ஸ், நதன் லியோன் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக இரு இனிங்ஸ்களிலும் சதம் அடித்த கவாஜா தெரிவு செய்யப்பட்டார். ஐந்தாவதும் இறுதியுமான போட்டி எதிர்வரும் 14ஆம் திகதி ஹோபார்ட்டில் ஆரம்பமாகிறது. (ஐ)



பங்களாதேஷுடனான டெஸ்ட்

## முதல்நாள் ஆட்டத்தில் நியூசிலாந்து 349/1

கிறிஸ்ட்சூரிச், ஜன. 10

ரொம் லதாமின் அபார அரைச்சதத்தின் உதவியால் பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல்நாள் ஆட்டம் முடிவில் நியூசிலாந்து அணி 349 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை இழந்துள்ளது.

நியூசிலாந்துக்கு சென்றுள்ள பங்களாதேஷ் அணி இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. முதல் போட்டியை வென்று வரலாற்று சாதனையை படைத்த பங்களாதேஷ் அணி தொடரில் முன்னிலையில் உள்ளது.

இந்த நிலையில், இரண்டாவது போட்டி நேற்று ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணிக்கு ரொம் லதாம், வில் யங் இணை தொடக்கம் கொடுத்தது. இருவரும் இணைந்து அபாரமான இணைப்பாட்டத்தை ஏற்படுத்தினர்.

ரொம் லதாம் 65 பந்துகளில் அரைச்சதத்தைப் பூர்த்தி செய்தார். அவரைத் தொடர்ந்து வில் யங் 98 பந்துகளில் அரைச்சதத்தைப் பூர்த்தி செய்தார். இருவரும் இணைந்து 148 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்ற நிலையில் யங் 55 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த டெவன் கொன்வே லதாமுடன் இணைந்து வலுவான இணைப்பாட்டத்தை ஏற்படுத்தினார். இதனிடையே 133 பந்துகளில் சதம் அடித்தார் லதாம். இது அவரின் 12ஆவது சதமாகும்.

தொடர்ந்து இருவரின் அபாரமான ஆட்டத்தால் இலகுவாக 300 ஓட்டங்களை கடந்தது நியூசிலாந்து அணி. நேற்று முதல் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்த போது நியூசிலாந்து அணி ஒரு விக்கெட்டை மட்டும் இழந்து 349 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

லதாம் 278 பந்துகளை எதிர்கொண்டு 28 பௌண்ட்ரிகளுடன் 186 ஓட்டங்களையும், கொன்வே 148 பந்துகளில் 10 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 99 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காமல் உள்ளனர். இன்று போட்டியின் இரண்டாவது நாள் ஆட்ட மாகும். (ஐ)

## அவிஸ்கவுக்கு கொரோனா!

கொழும்பு, ஜன. 10

சிம்பாப்வே தொடருக்கான 18 பேர் கொண்ட அணியில் இடம் பெற்றுள்ள அவிஷ்க பெர்னாண்டோவுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

அவிஷ்க பெர்னாண்டோவுக்கு நேற்று முன்தினம் நடத்தப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையிலேயே தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதனால், அவர் சிம்பாப்வேயுடனான தொடரை இழக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

அவிஷ்க பெர்னாண்டோ இல்லாதது இலங்கையின் துடுப்பாட்ட வரிசைக்கு பின்னடைவாகும். ஆனால், முன்னர் தடை செய்யப்பட்ட மூவரான குசல் மெண்டிஸ், நிரோஷன் டிக்வெல்ல மற்றும் தனுஷ்க குணதிலக ஆகியோர் அணிக்கு திரும்பியுள்ளது சாதகமாக அமைந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



## அடிலொய்ட் ரென்னிஸ்; பட்டம் வென்றார் ஆஷ்லே!

அடிலொய்ட், ஜன. 10

அடிலொய்ட் சர்வதேச ரென்னிஸ் போட்டியின் இறுதியாட்டத்தில் ஆஷ்லே பார்டி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார். ஆஷ்லே பார்டி 6 -3, 6 - 2 என்ற செற் கணக்கில் ரைபாகினாவை வெற்றி பெற்றிருந்தார்.

செப்ரெம்பரில் நடந்த அமெரிக்க ஓப்பனுக்கு பிறகு அவர் பங்கேற்ற முதல் போட்டியிலேயே ஆஷ்லே பட்டத்தைக் கைப்பற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஜாம்பவான்களின் கிரிக்கெட்; சச்சின் விளையாட மாட்டார்!

புதுடில்லி, ஜன. 10

ஜாம்பவான்களின் லீக் கிரிகெட் தொடரில் சச்சின் டெண்டுல்கர் விளையாட மாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓமான் தலைநகர் மஸ்கட்டில், வரும் ஜன. 20ஆம் திகதி ஜாம்பவான்களின் லீக் தொடங்குகிறது.

இதில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், அவுஸ்திரேலியா, இங்கிலாந்து உள்ளிட்ட அணிகளின் முன்னாள் வீரர்கள், இந்தியா, ஆசியா, 'ரெஸ்ட் ஒவ் வேர்ள்ட்' என, மூன்று அணிகளாக பங்கேற்கின்றனர்.



இந்த நிலையில், இந்தத் தொடரில் இந்தியாவின் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் விளையாட மாட்டார் என்று அவரின் மேலாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தியா சார்பில் சேவக், யுவராஜ் சிங், ஹர்பஜன் சிங், யூசுப் பதான், இர்பான் பதான், முகமது கைப், ஸ்டுவர்ட் பின்னி, பத்ரிநாத் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

ஆசிய அணியில் சனத் ஜெயசூர்யா, அப்ரிடி, அக்தர், முரளிதரன், டில்ஷான், உமர் குல், அஸ்கர் ஆப்கன் உள்ளிட்டோர் இடம் பெற்றுள்ளனர். என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 16,000 சுற்றுலா பயணிகள் ஆறு நாட்களில் வருகை!

கொழும்பு, ஜன. 10

ஜனவரி முதலாம் திகதியிலிருந்து 6ஆம் திகதி வரை, இந்த நாட்டுக்கு 16 ஆயிரம் சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர் என்று சுற்றுலா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

விமான நிலையம் ஊடாக வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்தில் தடுப்பூசி செலுத்தும் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஒரு தடுப்பூசியை மட்டும் பெற்றுக்கொண்ட நிலையில் இந்நாட்டுக்கு வருவோருக்கு இரண்டாவது தடுப்பூசியும், அதேபோன்று இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டவர்களுக்கு மூன்றாவது தடுப்பூசியையும் செலுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மக்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மூலம் இலங்கையில் கொரோனா வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்த முடிந்தது.

அதேபோன்று வீழ்ச்சியடைந்துள்ள சுற்றுலாத் துறை படிப்படியாக உயர்ந்து வருவதை காணக்கூடியதாக உள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (கே)

# புகையிரதத்திணைக்களத்துக்கு 2021இல் ரூ. ஆயிரம் கோடி நட்டம்!

கொழும்பு, ஜன.10

புகையிரதத் திணைக்களத்துக்கு கடந்த ஆண்டில் ஆயிரம் கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக திணைக்களத்தின் பொது முகாமையாளர் தம்மிக ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு புகையிரதத் திணைக்களத்துக்கு ஏற்பட்ட செலவீனம் ஆயிரத்து 400 கோடி ரூபாயாகும். ஆனால், 400 கோடி ரூபாய் வருமானமே கிடைக்கப் பெற்றது. புகையிரத கட்டணத்தை உயர்த்தாது புகையிரதத் திணைக்களத்துக்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பில் பேசுவது சிறந்த விடயமல்ல.

புகையிரதத் திணைக்களத்துக்கு முந்தைய வருடங்களில் 800 கோடி ரூபாய் வருமானம் கிடைத்தது. எனினும், கொரோனா பெருந்தொற்றுக்குப் பின்னர் வருமானம் குறைவடைந்தது.

பஸ் கட்டணம் தொடர்ச்சியாக அதிகரிக்கப்படுகின்றது. எனினும், 2018ஆம் ஆண்டு சொற்ப அளவில் ரயில் கட்டணம் அதிகரிக்கப்பட்ட தையடுத்து இதுவரை ரயில் கட்டணம் அதிகரிக்கப்பட வில்லை.

பஸ் கட்டணம் புகையிரத கட்டணம் தொடர்பில் ஒப்பிட்டுப்பார்த்தால் இலாப நட்டம் பற்றி பேசுவதற்கு புகையிரதத் திணைக்களம் தயாராக இருக்கின்றது. எனினும், புகையிரத சேவையை ஒரு சேவையாக கருதி செயல்படுத்தினால் இலாபம் - நட்டம் தொடர்பில் கதைப்பதில் அர்த்தமில்லை - என்றார். (கே)

# ஐ. தே. கவிலிருந்து பிரிந்தவர்கள் உரியநேரத்தில் மீளவும் இணைவர்!

## கட்சியின் உபதலைவர் ருவான்

கொழும்பு, ஜன.10

“ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து பிரிந்து சென்ற குழு, உரிய நேரத்தில் அதேமேடையில் ஒன்றிணையும் என்று நான் நம்புகிறேன்”, என்று ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் கம்பகா மாவட்ட காரியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மேலும், “இன்று ஒட்டுமொத்த மக்களும் அரசியல்வாதிகளை நிராகரிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. அரசியல் கட்சிகளையும் புறக்கணிக்கின்றனர். அரசியலை வெறுத்து ஒதுக்கும் நிலைமைக்கு நாட்டு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த நல்லாட்சி அரசாங்கம், முந்தைய அரசாங்கத்தில் அரசியல்வாதிகளினால் மேற்கொள்ளப்பட்ட ஊழல் மோசடிகளை முடிவுக்கு கொண்டுவந்து மாற்றத்தை ஏற்படுத்தும் என்று மக்கள் ஓரளவு நம்பிக்கை கொண்டிருந்தனர்.

ஆனால், அப்போது ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் ஏற்பட்ட இழுபறி காரணமாக, முன்னாள் திருடர்கள் சுதந்திரமாக அரசியல் செயல்பாடுகளை முன்னெடுத்து இனவாதத்தை மக்கள் தலையில் விதைத்து ஆட்சியை கைப்பற்றினர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தி, அவ்வாறான திருடர்களை கைதுசெய்து நாட்டை சரியான பாதைக்குக் கொண்டு செல்வார் என்று நினைத்து 69 இலட்சம் மக்களும் அவருக்கு வாக்களித்தனர்.

எனினும் தற்போது என்ன நடந்துள்ளது? ஜனாதிபதியால் இன்று முறையாக செயல்பட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த அரசாங்கம், அரசமைப்பின் 20ஆவது சீர்திருத்தத்தை கொண்டுவந்ததுடன், பாராளுமன்றத்தில் மூன்று இரண்டு பெரும்பான்மையை வைத்துக்கொண்டு எதனையும் செய்ய முடியாதுள்ளது. (கே)

# 3 விபத்துக்களில் மூவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜன. 10

அநுராதபுரம், பொலநறுவை, குருநாகல் ஆகிய மாவட்டங்களில், நேற்று முன்தினம் இடம்பெற்ற மூன்று விபத்துக்களில் மூவர் மரணமடைந்தனர் என்று, பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அநுராதபுரம் வீதி, கேத்தபஹூவ பிரதேசத்தில், பாதெனிய நோக்கி பயணித்த வானொன்று வேக்கக்கட்டுப்பாட்டை இழந்து மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. இதில், 12 வயது சிறுவன் உயிரிழந்த நிலையில் ஆறு பேர் காயமடைந்தனர்.

பொலநறுவை ஹபரணை பொலிஸ் பிரிவில் தனியார் பஸ்ஸொன்று, பாதசாரி ஒருவரை மோதியதில் அவர் உயிரிழந்தார். மோரகஸ்வெள பிரதேசத்தை சேர்ந்த 88 வயது நபரே மரணமடைந்தார்.

பஸ்ஸின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும், குருநாகல் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பன்னலை பிரதேசத்தில், மோட்டார் சைக்கிளொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் அதைச் செலுத்தியவர் உயிரிழந்தார். தலம்மெஹெர பிரதேசத்தை சேர்ந்த 28 வயது நபரே மரணமடைந்தார். (கே)

# மாலை 6 மணிக்கு முன் சமைத்து முடியுங்கள்!

## இலங்கை மின்சார சபை

கொழும்பு, ஜன. 10

மின்சார அடுப்புகளை பயன்படுத்தி சமைக்கும் நுகர்வோர் மாலை 6 மணிக்கு முன்னதாக உணவைத் தயாரியுங்கள் என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதன் மூலம் மின்வெட்டை குறைக்க முடியும் என மின்சார சபையின் பொது முகாமையாளர் எம். ஆர். ரணதுங்க தெரிவித்தார்.

இந்நிலையில், அடுத்த சில நாட்களிலும் அவ்வப்போது மின்சாரம் தடைப்படலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனை கூறியுள்ளார். இதேவேளை, எதிர்வரும் 15ஆம் திகதிக்கு பின்னர் பல மணி நேரம் மின் விநியோகம் தடைப்படும் என தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அனுமதியின்றி மாடு ஏற்றியவர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 10

அச்சுவேலியில் இருந்து, அனுமதிப்பத்திரமின்றி மாடுகளை ஏற்றிச் சென்ற ஒருவரை கோண்டாவிலில் வைத்து கைது செய்ததாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் ஐந்து சந்திப் பகுதியை சேர்ந்தவர் எனத் தெரியவருகின்றது.

நேற்று முன்தினம் மாலை கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த பொலிஸார் சந்தேகத்துக்கிடமான முறையில் வந்த வாகனத்தை சோதனையிட்டபோது, மாடுகளை அனுமதியின்றி ஏற்றி சென்றமை கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்தே அவர் கைது செய்யப்பட்டார். (ஐ)

# வேலைக்காக கொழும்பு சென்ற இளைஞர் மாயம்!

## கண்டுபிடிக்க உதவுமாறு கோரிக்கை



வவுனியா, ஜன. 10

தொழில் நிமித்தமாக வவுனியா நகர் இலுப்பைக்குளம் பகுதியிலிருந்து கொழும்புக்கு சென்ற இளைஞர் ஒருவரை காணவில்லை என்று வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாலுசுந்தரம் சுதர்சன் (வயது 20) என்ற இளைஞரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறியவருவதாவது,

குறித்த இளைஞர் கடந்த மூன்று மாதங்களாக கொழும்பில் தங்கியிருந்து தொழில் புரிந்துள்ளார். இந்நிலையில், கடந்த 6 ஆம் திகதி வீட்டுக்கு (வவுனியாவுக்கு) செல்வதாக நண்பர்களிடம் கூறி அங்கிருந்து புறப்பட்டுள்ளார்.

இதேசமயம், வீட்டிற்கும் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி தான் வவுனியாவிற்கு வருவதாகக் கூறியுள்ளார். எனினும், அதன் பின்னர் அவருடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. இரண்டு நாட்கள் கடந்தும் குறித்த இளைஞர் வீட்டிற்கு வரவில்லை. இதனையடுத்து அவரின் தாயார் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இளைஞர் தொடர்பான தகவல் தெரிந்தவர்கள் 076 770 0438 குறித்த இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்தி தெரியப்படுத்துமாறு அவர்களின் குடும்பத்தினரால் கோரப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

எல்லோரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**காளிமாதா ஜோதிட நிலையம்**

ॐ ☪ ✝





**இந்திய பிரபல்யமான பாரம்பரிய**

**கண்ணன் பொதுவாழ்தாஸ்**

ஜாதகம், கைரேகை பார்த்து பலன் சொல்லுதல், கணவன் மனைவி சண்டை, காதல் பிரிவு, திருமண அக்கறையின்மை, வேலை தொழில் உத்தியோகம் போன்ற பிரச்சினையின்மை செய்வினை, சூனியம் போன்றமையால் தொழில் பாதிப்பு, வீட்டில் பேய், பிசாசு நடமாட்டம், சாக்கினி, டாக்கினி பேய் விரட்டப்படுதல் போன்ற பிரச்சினைகளையும், கண் திருஷ்டியால் வாழ்வில் முன்னேற்றமின்மை, குழந்தை பாக்கியம் இல்லாதவர்களும் வேண்டிய வழிகளைக் காட்டுதல், வெளிநாட்டுப் பிரயாண வாய்ப்புகள், சிறந்த கல்வி மேம்பாடு ஆகியவற்றுக்கும் பலன் சொல்வதோடு பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பார். மேலும் உங்கள் வீட்டை காவல் செய்தல் போன்றவற்றையும் செய்வார்.

**நேரம்: காலை 8.00 - இரவு 7.00**

இல.109, மட்டு நகர் வீதி, கல்முனை
அர்ச்சனா ஜுவலரி அருகாமையில் (தேசிய சேமிப்பு வங்கி எதிர்ப்பக்கமாக)
075 217 1943

## பேரினவாதத்தை...

சிறப்பாக முன்னெடுப்பதற்கு பதிலாக, சிறுபான்மையின மக்களை இலக்கு வைத்து வெறுப்புணர்வை பரப்புவதன் மூலம் பேரினவாதத்தை ஊக்குவிப்பதிலேயே ராஜபக்ஷ அரசாங்கம் கவனத்தை குவித்திருக்கின்றது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் விசனம் வெளியிட்டுள்ளது.

ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில், 'அரிசிக்கான தட்டுப்பாட்டால் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகள்' என்ற தலைப்பில் வெளியாகியிருந்த ஆசிரியர் தலையங்கத்தை மேற்கோள்காட்டி தனது உத்தியோகபூர்வ ருவிட்டர் பக்கத்தின் பதிவிலேயே மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசிய பிராந்தியப் பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தற்போது நாடு பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்திருக்கும் சூழ்நிலையில், அவற்றுக்கு தீர்வை வழங்கக்கூடிய வகையிலான சிறந்த தீர்மானங்கள் எவையும் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படவில்லை. பல வாரங்களாக நீடிக்கும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு வெகு விரைவில் முடிவுக்கு வருவதாகத் தெரியவில்லை.

இதில் தலையீடு செய்து பிரச்னைக்குத் தீர்வை வழங்குமாறு பொதுமக்கள் அரசாங்கத்திடம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றபோதிலும், எந்தவொரு முன்னேற்றகரமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று அந்த ஆசிரியர் தலையங்கத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்போது மதுபானம் மற்றும் சிகரெட் மாத்திரமே தட்டுப்பாடின்றிக் கிடைக்கின்றது என்று மேற்படி ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆசிரியர் தலையங்கத்தை மேற்கோள்காட்டி மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசிய பிராந்தியப் பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலி அவரின் உத்தியோகபூர்வ ருவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவில் கூறியிருப்பதாவது:

"இலங்கையானது எரிபொருள் உள்ளடங்கலாகப் பல்வேறு அத்தியாவசியப் பொருட்களிலும் கடுமையான பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் நாட்டின் சீரான நிர்வாகத்திலும் மனித உரிமைகளை வலுப்படுத்துவதிலும் கவனம் செலுத்துவதற்கு பதிலாக இன மற்றும் மத ரீதியான சிறுபான்மை மக்களை இலக்கு வைத்து வெறுப்புணர்வை பரப்புவதன் ஊடாக பேரினவாதத்தை ஊக்குவிப் பதிலேயே ராஜபக்ஷ அரசாங்கம் கவனத்தைக் குவித்திருக்கின்றது" என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## பிள்ளையான்...

காந்தனும் (பிள்ளையான்), முதல்வர் தி. சரவணபவன் தலைமையிலான சில மாநகர உறுப்பினர்களும் நேற்று மூடிய அறைக் குள் பேச்சு நடத்தினர்.

இந்தப் பேச்சின்போது, இரு வாரங்களுக்குள் இந்த விடயத்துக்கு தீர்வு எட்டப்படும் என்று பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தன் உறுதியளித்தார் என்று நம்பகமான வட்டாரங்கள் 'ஈழநாடு'வுக்கு தெரிவித்தன.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 6 மணி தொடக்கம் சுமார் ஒரு மணி நேரத்துக்கும் அதிக நேரம் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாநகர சபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி நடத்தி வருகின்றது. இந்த நிலையில், பிள்ளையானின் ஆதரவாளராக அறியப்பட்ட எம். தயாபரன் மாநகரின் ஆணையாளராக நியமிக்கப்பட்டிருந்தார்.

ஆணையாளருக்கும், முதல்வருக்கும் இடையே சில அதிகாரங்கள் விடயத்தில் மெல்லத் தொடங்கிய இந்த மோதலால் அபிவிருத்தி பணிகள் பல இடையில் நிற்கின்றன. இது தொடர்பில் பகிரங்கமாக இருவரும் கருத்துக்களை வெளியிட்டு வந்தனர். இந்த நிலையில், சந்திரகாந்தன் எம். பியும் அவரின் கட்சி முக்கியஸ்தர்கள் சிலரும், மாநகர முதல்வர் சரவணபவன் மற்றும் சில மாநகர சபை உறுப்பினர்கள் நேற்று முன்தினம் இரகசியமாக சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர். (ஐ)

## சீன வெளிவிவகார...

விலான இலங்கை மாணவர்கள் மீண்டும் சீனாவுக்கு திரும்புவது குறித்து கவனம் செலுத் தப்பட்டதாக கூறினார்.

அத்துடன் சுற்றுலா, முதலீடு, கொரோனா நிவாரணம் மற்றும் கொரோனாவுக்கு பிந்தைய ஏற்பாடுகள் போன்ற விடயங்களும் கலந்துரையாடப்பட்டதாக மஹிந்த அந்தப் பதிவில் கூறியுள்ளார். (அ)

## சீனா எமது...

சீனாவிற்கும் இடையே இராஜதந்திர உறவு ஏற்படுத்தப்பட்டு 65 ஆண்டு பூர்த்தி மற்றும் புகழ்பெற்ற இறப்பர் - அரிசி ஒப்பந்தத்திற்கு 70 ஆண்டுகள் பூர்த்தியாகின்றமையை முன்னிட்டு சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வாங்க் யீ யின் பங்கேற்புடன் கொழும்பு துறைமுக நகரில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வாங்க் யீ ஆகியோர் இதன்போது இலகுரக படகு முற்றத்தின் முன்னால் அமைக்கப்பட்டுள்ள நடைபாதையை பொதுமக்கள் பாவனைக்காக திறந்துவைத்தனர்.

நிகழ்வில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உரையாற்றிய போது தெரிவித்ததாவது;

"நமக்கும் சீனாவுக்கும் இடையிலான இந்த உறவு நீண்ட வரலாறு கொண்டது. உலகம் முழுவதும் வர்த்தகம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலேயே சீன அரசாங்கம் இலங்கைக்கு வந்து வர்த்தகம் செய்ததாக சாட்சிகள் உள்ளன.

சீனா நமது உயிர் தோழன். வரலாற்றில் எவ்விடத்திலும் எம்மத்தியில் மனக்கசப்புகள் நேர்ந்ததில்லை. அதனால் நமது நாடுகள் எப்போதுமே மிகவும் சாதகமான கொடுக்கல் - வாங்கல்களை செய்து கொண்டிருக்கின்றன. அன்று ஏற்படுத்தப்பட்ட இறப்பர்-அரிசி ஒப்பந்தத்தை நம்மவர்கள் இன்னும் நினைவில் வைத்திருக்கிறார்கள். "எமது இறப்பர் உங்களிடமிருந்து அரிசி". அதேபோன்று இலங்கையில் உணவு தட்டுப்பாடு ஏற்பட்டபோது, அப்போதைய பிரதமர் சௌசன்லாய் இலங்கைக்கு தேவையான உணவுப் பொருட்களை அனுப்பி மிகவும் மதிப்புமிக்க செய்தியை அனுப்பினார்." என்றார்.

## நயினை...

விகாராதிபதியிடம் ஆசிகளை பெற்றுக் கொண்டார்.

இதன் பின்னர், தொடர்ந்து நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்திலும் விசேட வழிபாடுகளை மேற்கொண்டார்.

இதன்போது, சஜித் பிரேமதாஸவின் மனைவி ஜெலனி பிரேமதாஸ, மாத்தறை பாரளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண, உமாச்சந்திர பிரகாஷ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## கிணற்றில் வீழ்ந்து...

சிறுவனே உயிரிழந்தார்.

குறித்த சிறுவனின் தந்தை தோட்டத்தில் வேலை செய்து கொண்டு இருந்த நிலையில், வீட்டிலிருந்து தோட்டத்துக்கு நடந்து சென்ற சிறுவன், கிணற்றடியில் விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது தவறுதலாக கிணற்றில் விழுந்துள்ளார்.

சிறுவனை காணாத பெற்றோர், சிறுவனை எங்கும் தேடிய நிலையில் கிணற்றில் சடலமாக காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸார் தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

## வர்த்தக கடன்...

இரு நாள் பயணமாக இலங்கை வந்துள்ள சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யீ நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற இந்த சந்திப்பில்,

"கோவிட் தொற்று நோய்க்கு முகங்கொடுத்துள்ள சூழ்நிலையில், பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வாக கடனை மீளச் செலுத்துவதை மறுசீரமைப்பதில் கவனம் செலுத்தினால், அது நாட்டுக்கு பெரும் நிவாரணமாக அமையும். கோவிட் தடுப்பூசி திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்காக, இலங்கைக்கு சினோபார்ம் தடுப்பூசிகளை வழங்க சீன அரசாங்கம் தொடர்ச்சியாக வழங்கிய ஆதரவுக்கும், ஜனாதிபதி சீன அரசாங்கத்துக்கு நன்றி தெரிவித்தார்.

மேலும், சீன சுற்றுலாப் பயணிகளை உயிர்க் குமிழிக்குள் மட்டுப்படுத்தி இலங்கைக்கு வரவழைப்பதற்கு உதவுமாறும் கூறினார்.

சீனாவிலிருந்து மேற்கொள்ளப்படும் இறக்குமதிகளின் போது சலுகை வர்த்தகக் கடன் திட்டத்தைப் பெற்றுக்கொள்ள முடிந்தால், கைத்தொழில் துறையை தடையின்றி சீராக நடத்த முடியும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இவற்றுக்கு பதிலளிக்கும் முகமாகக் கருத்துரைத்த சீன வெளிவிவகார அமைச்சர், "எதிர்வரும் காலங்களில் அது நிறைவேறும். இலங்கையின் நெருக்கமான நண்பன் என்ற வகையில் சீனாவின் ஒத்துழைப்பு எப்போதும் கிடைக்கும் என்று கூறியதுடன், ஜனாதிபதியை சீனா வருமாறும் அழைப்பு விடுத்தார். (ஐ)

## கொரோனாவால்...

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் இந்த மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டதாக அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. (அ)

## வடக்கு, கிழக்கு...

எனவே, காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் பொத்துவில் ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

புத்தளத்திலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளுக்கு அப்பால்பட்ட கடற்பரப்புகளின் பல இடங்களில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை பெய்யக்கூடும் எனவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது. (ஐ)

## பரீட்சைகள்...

சிரியர் கபில சி.பெரேரா தெரிவித்துள்ளார்.

குறித்த பரீட்சைகள் கடந்த வருடம் இடம்பெறவிருந்த நிலையில், கோவிட் 19 தொற்றினால் பாதிப்படைந்த மாணவர்களின் கற்றல் செயல்பாட்டை கருத்தில் கொண்டு இந்த வருடத்திற்கு பிற்போடப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும், பரீட்சைகள் தாமதமடைவதால் பெரும்பாலான மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்படக்கூடும். எனவே, முன்னர் திட்டமிட்டப்படி, 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் 22ஆம் திகதி நடத்தப்படும் என்பதுடன், உயர்தர பரீட்சை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி ஆரம்பமாகும் என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

## காங்கேசன்துறை...

ருந்து நண்பகல் 12.15 மணிக்கு யாழ்ப்பாணம் முதன்மை ரயில் நிலையத்தை வந்தடைந்தது. பின்னர், அங்கிருந்து காங்கேசன்துறை புகையிரத நிலையத்துக்கு பயணத்தைத் தொடர்ந்தது.

காங்கேசன்துறையிலிருந்து பிற்பகல் 1.15 மணிக்கு பயணத்தை ஆரம்பிக்கும் குளிரூட்டப்பட்ட நகர் சேர் கடுகதி தொடருந்து சேவை யாழ்ப்பாணம் முதன்மை புகையிரத நிலையத்திலிருந்து 1. 37 மணிக்கு சேவையை ஆரம்பித்து கொழும்பை இரவு 8 மணிக்கு சென்றடையும்.

இதுவரை காலமும் 5 குளிரூட்டப்பட்ட பெட்டிகளுடன் சேவையில் ஈடுபட்ட இந்த நகர் சேர் கடுகதி சேவை நேற்று முதல் மேலதிகமாக 3 பெட்டிகளை இணைத்து 8 பெட்டிகளுடன் சேவையில் ஈடுபடவுள்ளது. இதன்மூலம் பயணிகளின் எண்ணிக்கை 360ஆக அதிகரிக்க முடியும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## கிளிநொச்சி...

இயற்கை எமக்கு கை கொடுத்துள்ள போதிலும், இரசாயன உரம் கிடைக்காமையால் காலபோக பயிர் செய்கையில் தமக்கு பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

அத்துடன், கடந்த வருடத்தில் ஓர் ஏக்கரிலிருந்து 30 தொடக்கம் 40 வரையான மூட்டை நெல் அறுவடையாகக் கிடைத்தது. ஆனால், இம்முறை 12 முதல் 15 மூட்டை நெல்லே கிடைக்கிறது.

இருப்பினும் இம் முறை அரசாங்கம் கமநலசேவையின் ஊடாக வழங்கிய சேதன உரம் மற்றும் நைத்திரேற் உரம் என்பவற்றையே பயன்படுத்தினர் என்றும், இதனால், தமக்கு எந்த பலனும் கிடைக்கப்பெறவில்லை எனவும் தெரிவித்தனர்.

இந்நிலை தொடருமாயின் காலபோக பயிர்செய்கையை புறக்கணிக்கபோவதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர். (ஐ)

## வாள்வெட்டு குழு...

னாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் 26 வயது நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். அத்துடன், சந்தேகநபரிடமிருந்து கூரிய ஆயுதம் ஒன்றும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

கடந்த நவம்பர் 23ஆம் திகதி மானிப்பாய் மற்றும் கொக்குவில் ஆகிய இடங்களில் உள்ள இரண்டு வீடுகளுக்குள் புகுந்த வாள்வெட்டு கும்பல் அடாவடியில் ஈடுபட்டு விட்டுத்தப்பித்தது. இந்த சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வந்த நிலையில் மானிப்பாய் புதுமடத்தைச் சேர்ந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். சந்தேக நபருக்கு எதிராக நீதிமன்றங்களில் பத்திற்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ள என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## இன்று முதல்...

நாடு முழுவதும் மின் வெட்டை அமுல்படுத்த நேர்ந்துள்ளதாகவும், அதற்கான அனுமதியை பெற்றுத் தருமாறும் இலங்கை மின்சார சபை, பொது பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் கோரியிருந்தது என்றும் இலங்கை மின்சார சபையினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு, தாம் அனுமதி வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மின்சார உற்பத்தி, மின்சார விநியோகம் ஆகிய நடவடிக்கைகளுக்கு இடையில் ஏற்படுகின்ற இடைவெளியை நிவர்த்தி செய்துக்கொள்ள முடியாமையினாலேயே, மின்சார சபை இந்த கோரிக்கையை விடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மின்சாரம் துண்டிக்கப்படவேண்டிய காலப் பகுதி மற்றும் நேரத்தை இலங்கை மின்சார சபையே தீர்மானிக்கும் எனவும் அவர் கூறினார்.

மின்சார பாவனையாளர்கள், கடந்த ஓரிரு வருடங்களாக தமக்கான மின்சார கட்டணத்தை செலுத்த தவறியுள்ளமையே, மின் வெட்டை அமுல்படுத்த காரணம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஈழநாடு
Eelanadu





# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் வளர்ச்சிநாள் யாழ்ப்பாணத்தில்

*யாழ்ப்பாணம், ஜன. 10*

*தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணியின் ஏற்பாட்டில் மகளிர் வளர்ச்சி நாள் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.*

*'பெண்களே நம் தேசத்தின் கண்கள்' எனும் தொனிப் பொருளில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெற உள்ள மகளிர் தினத்தை முன்னிட்டு பெண்கள் எழுச்சியோடு முன்னோக்கி செல்ல வேண்டும் என்னும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு கலை, கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றன.*

*தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் வாசுகி சுதாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் மற்றும் கட்சியின் உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-03)*

# 150 பேருக்கு மதுபான அனுமதி பத்திரம்!

*கொழும்பு, ஜன. 10*

*கடந்த ஆண்டு மாத்திரம் 150 மதுபான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்ற கலால் திணைக் களம் தெரிவித்துள்ளது.*

*இவற்றில் 81 அனுமதிப்பத்திரங்கள் சுற்றுலா சபையின் அங்கீகாரம் பெற்ற ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.*

*மேலும் பல்பொருள் அங்காடிகளுக்கு 69 உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. (ஐ)*

# எதிர்க்கட்சி தலைவர் சஜித் நாளை வடமராட்சி விஜயம்!

*வடமராட்சி, ஜன. 10*

*யாழ்ப்பாணம் வந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாளை செவ்வாய்க்கிழமை வடமராட்சிக்கு வருகை தரவுள்ளார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் உடுப்பிட்டி தொகுதி அமைப்பாளர் சிவக்கொழுந்து அகிலதாஸ் தெரிவித்தார்.*

*நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு வருகை தரும் எதிர்க்கட்சி தலைவர் சிறுநீரகப் பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கான இரத்த சுத்திகரிப்பு இயந்திரம் ஒன்றை வழங்கவுள்ளார்.*

*இதனைத் தொடர்ந்து முற்பகல் 11மணியளவில் உடுப்பிட்டி தொகுதி அமைப்பாளரின் வீராணன் தோட்டம், கரணவாய் தெற்கு, கரவெட்டியில் உள்ள இல்லத்தில் கிராம மக்கள் சந்திப்பு இடம்பெறவுள்ளது.*

*இந்தச் சந்திப்பில் விவசாயிகள் மற்றும் வீட்டுத் திட்டம் தொடர்பாக மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவரிடம் எழுத்து மூலமாக அறிவிக்க முடியும்.*

*அத்துடன், உதவி தேவைப்படும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு பொங்கல் பொருட்களையும், சிறுவர்களுக்கு பால்மா பைக்கெற்றுக்களையும் வழங்கி வைக்கவுள்ளார். (ஐ - 2)*

# நாட்டு மக்களின் பிரச்னைகளை தீர்க்க முடியாத நிலையில் அரசு!

## யாழ்ப்பாணத்தில் சஜித் தெரிவிப்பு



*யாழ்ப்பாணம், ஜன. 10*

*நாட்டு மக்கள் எதிர்நோக் கும் பிரச்னைகளுக்கு தீர்வு வழங்க முடியாத நிலையில் இந்த அரசாங்கம் காணப்படுகிறது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்*

*நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் திருநகரில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.*

*தற்போதுள்ள அரசாங்கம் நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு தீர்வு வழங்க முடியாத நிலையில் காணப்படுகிறது. குறிப்பாக அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றம் பால்மா எரிவாயு தட்டுப்பாடு போன்றவற்றை நிவர்த்தி செய்வதற்கு இந்த அரசாங்கத்தால் எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை.*

*இந்த அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்களாக உள்ளவர்கள் சீனாவால் வழங்கப்பட்ட மாளிகைக்குள் இருந்து கொண்டு ஒவ்வொரு கதைகளை கூறிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு வழங்குவதற்கு எந்தொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.*

*ஆனால், ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சி மலரும்போது குறிப்பாக வட, கிழக்கில் உள்ள மக்களின் குறை நிறைகள் தீர்த்து வைக்கப்படும். அவர்களின் அடிப்படை வசதிகளும் கூட பூர்த்தி செய்யப்படக் கூடிய சூழ்நிலை வரும்*

*எனினும் நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்து கொண்டு நாங்கள் பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம் குறிப்பாக கிராமப்புற வைத்தியசாலைகளுக்கு உதவி மற்றும் பின்தங்கிய இடங்களில் உள்ள பாடசாலைகளுக்கு அதாவதுகிராம மட்ட பாடசாலைகளுக்கான நவீனரக கணனி உபகரணங்கள், தொழில்நுட்ப சாதனங்கள் வழங்கும் திட்டங்களை முன்னெடுத்துள்ளோம்*

*நாங்கள் அரசாங்கத்தின் நிதியில் செய்யவில்லை. எம்மால் எமது முயற்சியால் இந்த உதவிகளை மேற்கொண்டு வருகின்றோம். ஆனால் நமது ஐக்கிய மக்கள் சக்தி அரசு ஆட்சிக்கு வருமாக இருந்தால் இதே போன்று பன்மடங்கு சேவையை மக்களுக்கு வழங்க முடியும். - என்றார். (ஐ-3)*




# ஒமைக்ரோனை அடையாளம் காண்பதற்கு பரிசோதனைகளை விஸ்தரிக்கவேண்டும்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

*கொழும்பு, ஜன. 10*

*நாட்டில் ஒமைக்ரோன் திரிபை அடையாளம் காண்பதற்கான பரிசோதனைகள் விஸ்தரிக்கப்பட வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.*

*இதனை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகக் குழு மற்றும் மத்தியக் குழுவின் உறுப்பினர் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்தார்.*

*தற்போது ஒமைக்ரோன் தொற்று உறுதியானவர் சமூகத்தில் இருப்பதற்கான சாத்தியம் நிலவுவதாகவும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.*




# மரண அறிவித்தல்



பிறப்பு
24 - 06 - 1947

இறப்பு
07 - 01 - 2022

## திருமதி தம்பையா சொர்ணலட்சுமி

*(சொர்ணம்)*

*கந்தர்மடம் - யாழ்ப்பாணம்*

கந்தர்மடம் மணல்தறை ஒழுங்கையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பையா சொர்ணலட்சுமி அவர்கள் 07.01.2022 அன்று வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் திரு.மு.தம்பையா (நெடுந்தீவு) ஓய்வு பெற்ற அலுவலர் யாழ். இந்துக்கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பு - இராசம்மா தம்பதியினரின் அன்புப் புதல்வியும், தாட்சாயினி (ஆசிரியை - புத்தூர் மடிஹேற பஞ்சசீஹ வித்தியாலயம்), தயாளினி (சுவிஸ்), கமலசொரூபன் (சுவிஸ்), தர்மினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவசீலன், தேவானந் (சுவிஸ்), சிம்ம வாஹினி (சுவிஸ்), விஜயகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், மாறஜனகன், தீபிகா, ஹரிஸ்ராஜ், ரம்யா, சௌமியா, கவிந், கம்ஸ்வர்த்தனி, கார்த்திகன், கவிநயா, சஞ்சனா, சஞ்சித், சந்தோஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பாக்கியநாதன், அன்னம், காலஞ்சென்றவர்களான ஸ்ரீபத்மநாதன், கணநாதன், குருநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (10.01.2022) அன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
**குடும்பத்தினர்.**

முகவரி :
இல. 03, சிவன் புதுவீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு :
**0719002793, 0775828955**

*இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.01.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.05 மணி : உளவியல் கருத்து-
உளவளத்துனையாளர் நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர்
விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கொழும்பு-16-மறு ஒளிபரப்பு
11.30 மணி : மனிதனின் மறுபக்கம்

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
நகைச்சுவை நிகழ்ச்சி



1.00 மணி : அறிந்தும் அறியாமலும்
(மறு ஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-சகாசம்,தேவி-02
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை
மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் ரைம்
6.30 மணி : நலந்தானா-வைத்தியர்-ராஜீவ்



**இரவு**
7.00 மணி : சொற்சமர் -பாடசாலை
மாணவர்களுக்கா விவாத நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
9.30 மணி: ஹலோ கோடம்பாக்கம்



10.00 மணி : நேருக்கு நேர்

---

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

---

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

---

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

---

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி :கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

---

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம்)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு சனி)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறுஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : விவிலியம் அறிவோம்
(திருகோணமலை) ஞாயிறு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்) மறு ஒளிபரப்பு
04.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு) மறுஒளிபரப்பு
05.00 மணி: திருப்பலி (திருகோணமலை)
மறுஒளிபரப்பு
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறுஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள்
மறு ஒளிபரப்பு
7.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம்)
மறு ஒளிபரப்பு

---

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு